# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜனவரி 18, 2019. இதழ் - 47





A

விளம்பரங்களுக்கு

தொடர்பு : 071 399 909 1

arangamnews@gmail.com




*நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா ஐபோர்டைக் கொண்டுவா !!*

ஒரு காலத்தில் குழந்தைகளை உறங்கவைப்பதற்கு தாய்மார் தாலாட்டுப்

பக்கம் - 11



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பாராட்டுகிறோம்**

**ஆனால், பாதிக்கிணறுதான் தாண்டியிருக்கிறீர்கள்**

பக்கம் - 03



**'தேசிய பாடசாலைகள் அதிகார பகிர்வுக்கு எதிரானவை'**

பக்கம் - 05



**ஊடக மாபியாவின் எழுச்சி!**

இன்று மக்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தும் பெருவாரியான ஊடகங்கள் அரசியல்

பக்கம் - 07



## 'வருகிறது கிழக்கு அபிவிருத்திக்கும் அமைச்சு' -கி. துரைராசசிங்கம்

வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு என்பதற்கு பதிலாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு என்று ஒரு புதிய அமைச்சு பிரதமரின் கீழ் உருவாக்கப்படும் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளரான கி. துரராசசிங்கம் அரங்கத்திடம் தெரிவித்தார்.

நாடு அரசியல் சிக்கலில் மாட்டியிருந்த காலகட்டத்தில் இரு மாகாணங்களுக்குமாக அபிவிருத்தி அமைச்சுக்களை புதிதாக அமைக்க வேண்டும் என்ற விடயம் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரப்பட்டதாகவும்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மல்லிகைத்தீவு மக்களின் உயிருக்கு உலைவைக்கும் பேராபத்து!

### விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் மன்றாட்டம்

(காரைதீவு வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தையையடுத்துள்ள மிகவும்



பின்தங்கிய மல்லிகைத்தீவு கிராமத்தின் மக்கள் இன்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு போராடி வருகிறார்கள்.



75 குடும்பங்களைச் சேர்ந்த 278 பேர் வாழுகின்ற தனித் தமிழ்க்கிராமமான மல்லிகைத்தீவிலுள்ள பொதுக்கிணறு உள்ளிட்ட சகல 42 கிணறுகளிலும் கல்சியம் மற்றும் இரசாயனப்பொருள் கலந்துள்ளதால் அங்குள்ள மக்கள் சிறுநீரக நோய்க்கு ஆளாகிவருவதே இதற்கான அடிப்படைக்காரணமாகும்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## துறைமுக நகருக்காக கடலை நிரப்பும் பணிகள் முடிந்தன



கொழும்பு துறைமுக நகர நிர்மாணப் பணிகளுக்காக கடலை நிரப்பும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதனை சம்பிரதாயபூர்வமாக அறிவிப்பதற்கான நிகழ்வு துறைமுக நகரில் இடம்பெற்றுள்ளது. பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க உரையாற்றினார். இலங்கைக்கான சீன தூதுவர் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )


## போருக்குப்பின்னரான இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர்வாழ் மக்களின் பங்களிப்பு குறித்த கலந்துரையாடல்



வவுணதீவு நிருபர்) -

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் பதுளை வீதியில் அமைந்துள்ள புலயவெளி, ஆலய முன்றலில் எதிர்வரும் 19.01.2019 அன்று 9.00 மணிக்கு "போருக்குப் பின்னரான இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் வாழ் மக்களின் பங்களிப்பு" எனும்

தொடர்ச்சி... (பக்கம் -02 )

ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

## உணவுப் பொருட்களை கையால் தொட்டு விற்கத்தடை



உணவு வகைகளை கையால் தொட்டு விற்பனை செய்யும் நடவடிக்கை மே மாதம் முதலாம் திகதி முதல் தடை செய்யப்படவுள்ளது.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இது குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

மாகாண, மாவட்ட, பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு இது தொடர்பான வழிகாட்டல் அறிக்கை நேற்று வழங்கப்பட்டது.

## 16 நாட்களில் 2,000 டெங்கு நோயாளர்கள்



புதுவருடம் பிறந்து கடந்த 16 நாட்களில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலாக 625 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் 499 நோயாளிகளும் கம்பஹா மாவட்டத்தில் 180 நோயாளர்கள்



இடையாளங்காணப்பட்டதாக இலங்கைத் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளிகள் கூடுதலாக இனங்காணப்பட்டதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் சமூக சுகாதார சிறப்பு நிபுணர் டாக்டர் பிரஷீலா சமரவீர தெரிவித்தார்.

## மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்த தேர்தல் ஆணையம் கோருகின்றது



மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவால் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முந்தினம் (16) எழுத்து மூலம் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதேநேரம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழுவால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்காக பாராளுமன்றத்தில் விரைவான தீர்வுக்கு வருமாறு தேர்தல் ஆணைக்குழுவால் அந்தக் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தேர்தல் ஆணைக்குழுவில் நடந்த அரசியல் கட்சி தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## ‘வருகிறது கிழக்கு அபிவிருத்திக்கும் அமைச்சு’

ஆனாலும், முன்பிருந்த வட மாகாண அபிவிருத்தி அமைச்சு மாத்திரமே அமலுக்கு கொண்டு வரப்பட்டுவிட்டதாகவும் கூறும் துரைராசசிங்கம் அவர்கள், இருந்த போதிலும் அந்த வட மாகாண அமைச்சுக்குப் பதிலாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு என்ற ஒன்று பிரதமரின் கீழ் விரைவில் இயங்கும் என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியை ஒரு உயர் மட்டக் குழுவின் ஆலோசனையின் கீழ் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகவும் தாம் பிரதமரிடம் கூறியிருப்பதாகவும், அதன்படி அமைக்கப்படவுள்ள விசேட செயலணியில், வடக்கு கிழக்கில் அதிக ஆசனங்களைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் ஆலோசகர்களாக வழி நடத்துவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவை குறித்த அறிவித்தல்கள் விரைவில் வெளியாகும் என்றும் அவர் கூறினார்.

## ரயிலில் மோதி 470 இற்கும் அதிகமானோர் மரணம்



கடந்த இரண்டு வருடங்களில் ரயிலில் மோதி 470 இற்கும் அதிகமானோர் மரணமடைந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் தற்கொலை முயற்சிக்காக இவ்வாறு ரயிலின் முன் பாய்ந்துள்ளதாக தெரியவந்துள்ளதாக ரயில்வே பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்தார்.

## பிரிட்டனில் தெரீசா மே அரசாங்கம் தப்பியது: நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி



பிரிட்டனில் தெரீசா மே அரசாங்கம் தப்பியது: நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

பிரிட்டன் அரசு மீது எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி பெற்றுள்ள பிரதமர் தெரீசா மே, பிரெக்ஸிட் திட்டத்தை முன்னெடுக்க தங்கள் சொந்த நலன்களை புறந்தள்ளி, ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என்று எம்பிகளுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் முன்னதாக நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தனக்கு ஆதரவாக 325 வாக்குகளையும், எதிர்ப்பாக 306 வாக்குகளையும் பெற்று தெரீசா மே வெற்றி பெற்றார்.

ஆனால், இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் நடப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னர் தெரீசா மே கொண்டு வந்த பிரெக்ஸிட் ஒப்பந்தத்தை சில ஆளுங்கட்சி எம்பிக்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் ஆகிய இரு தரப்பும் இணைந்து தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

புதன்கிழமை இரவில் எஸ்என்பி உள்பட சில எதிர்க்கட்சி தலைவர்களை பிரதமர் தெரீசா மே சந்தித்துள்ளார். ஆனால், இவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் தொழிலாளர் கட்சி தலைவர் ஜெர்மி கோபின் பங்கேற்கவில்லை.

## அரசாங்க ஊழல் மோசடிகளை விசாரிக்க ஆணைக்குழு

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

கடந்த 2015ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி முதல் 2018ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரையான காலத்தில் அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து விசாரிப்பதற்காகவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தலைமையிலான ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## ஆற்றல் பேரவையின் பொங்கல் விழா



--- பவித்திரன் ---

மட்டக்களப்பு ஆரையம்பதியில் ஆற்றல் பேரவையின் ஏற்பாட்டில் வியாழன் அன்று கோலாகலமாக பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

அதில் பிரதம அதிதிகளாக மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் தவராஜா, மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி, மண்முனைப்பற்று பிரதேசசபை தவிசாளர் மகேந்திரலிங்கம் மற்றும் கௌரவ அதிதிகளாக பிரதேச செயலாளர் சத்தியானந்தி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரகாஸ், கல்வியற்கல்லூரி பீடாதிபதி புண்ணியமூர்த்தி மற்றும் சிறப்பு அதிதிகளாக வைத்திய அத்தியட்சகர் அல்மேடா, பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி ரமேஸ், காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராட்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆற்றல் பேரவையின் தலைவர் பிரசாந்தன் அவர்களின் தலைமையில் விழாவின் ஆரம்பகட்டமாக பண்டைய பாரம்பரிய பண்பாட்டு முறைப்படி ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டது.

ஊர்வலத்தில் மாட்டுவண்டில்களின் அணிவகுப்பும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குறிப்பாக இவ்விழா பொதுமக்களின் அமோக வரவேற்பை பெற்றிருந்ததுடன் கலைநிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டிருந்தன.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பாராட்டுகிறோம்

## ஆனால், பாதிக்கிணறுதான் தாண்டியிருக்கிறீர்கள்

சீவகன் பூபாலரட்ணம்

இலங்கை பாராளுமன்றத்தில் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு சபையின் வழிநடத்தல் குழுவினது நிபுணர் குழுவின் அறிக்கை, அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வாதப் பிரதிவாதங்களை மீண்டும் தொடங்கி வைத்திருக்கிறது.

தற்போதைய அரசாங்கத்துக்கு இந்த வரைபை முன்வைப்பதற்கான தார்மீக



உரிமை கிடையாது என்று கூறி, அதனை மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக நிராகரித்துவிட்டார். அவரது அரசியல் சுயலாபத் தேவை அது. இலகுவில் அவர் மீது குற்றஞ் சுமத்தி விடலாம். அவரைவிடுவோம்.

ஆனால், பொறுப்பை அவர் மீது மாத்திரம் சுமத்திவிட முடியாது.

முதலில் இந்த வரைபை அல்லது அரசியலமைப்பு மாற்றத்தின் மூலமான தீர்வை கொண்டு வருவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவந்தது. அது காலந்தாழ்த்தியதற்காக அவர்கள் கடுமையாக ஏனைய கட்சிகளால் விமர்சிக்கப்பட்டு வந்தனர். இப்போது, வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராட்டியாக வேண்டும்.

இந்த வரைபை எடுத்துக்கொண்டால் அது நிறைவேற்று ஜனாதிபதியை ஓரளவுக்கு ஒழிக்கிறது என்று கொள்ளலாம். கிட்டத்தட்ட வெஸ்ட்மினிஸ்டர்



நாடாளுமன்ற ஆட்சி முறையை கோடிகாட்டுகின்றது. கூட்டாட்சியா அல்லது ஒற்றையாட்சியா என்ற பிரச்சினையை பார்த்து சிங்கள மக்கள் எதிர்க்கலாம் என்பதற்காக, அதனை தெளிவாகக் கூறாமல் விட்டிருக்கிறது. "பிரிவுபடாத நாடு" என்ற உத்தரவாதத்தை சிங்கள மக்களுக்கு கொடுக்க முயல்கிறது. இவை சாதகமான, முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போகக்கூடிய ஏற்பாடுகள்தான்.

பௌத்தத்துக்கே முன்னுரிமை என்று சொன்னாலும் ஏனைய மதங்களின் கௌரவம் காக்கப்பட வேண்டும் என்றும் அது கூறுகிறது. இது பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டிய விடயம் அல்ல. என்ன கூறப்பட்டாலும் இந்த விடயத்தில் எதுவும் நடக்கப்போவதில்லை. நிலைமை அப்படியேதான் தொடரும்.

ஒற்றையாட்சியா கூட்டாட்சியா என்று நேரடியாக கூறாவிட்டாலும், "இரண்டாவது சபை" ஒன்றை மாகாண சபைகளின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களையும் கொண்டு அமைப்பதன் மூலம், மாகாண சபைகளின் குரலுக்கு அதிக அளவில் செவிசாய்க்கும் நிலைமையை இது ஏற்படுத்தலாம். இந்த விடயத்தில் ஒன்றைக் கூறியாகத்தான் வேண்டும். மாகாணசபைகளின் அதிகாரம் தொடர்பில் அதன் ஆளுமையை அதிகரிக்கச் செய்ய இந்த இரண்டாவது அவை நிச்சயமாக உதவத்தான் செய்யும். இங்கு பூரணமான கூட்டாட்சி கிடைக்காவிட்டாலும் நிலைமை மேம்படுகின்றது என்பதை மறுக்க முடியாது.

மாகாணங்கள் இணைவதற்கான ஏற்பாடுகளும் இங்கு காணப்படுகின்றன. அதற்காக வடக்கு, கிழக்கு உடனடியாக இணைந்துவிடும் என்று கூறமுடியாவிட்டாலும், எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள் அதற்கான ஒரு சதவீத வாய்ப்பாவது இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. பல குறைபாடுகள் இதில் இன்னமும் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அதற்காக அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் "தமிழ் ஈழம்" கிடைத்துவிடும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. கிடைக்கக்கூடிய விடயங்களை முதலில் பெற்றுவிட்டு, அதிலிருந்து முன்னேற வேண்டும் என்பதுதான் இங்கு சரியான வாதம்.

அடைந்தால் "தமிழ் ஈழம்", இல்லாவிட்டால் "மரணம்" என்ற வாதங்கள், உணர்ச்சியூட்டல் எல்லாம் காலாவதியாகிப்போன காலகட்டம் இது. பலருக்கு எனது இந்தக் கூற்று ஆத்திரத்தை, கோபத்தை ஏற்படுத்தலாம். நான் தமிழ் துரோகி, காட்டிக் கொடுப்பவன் என்றெல்லாம் என்னை நீங்கள் வர்ணிக்கலாம். எனக்கும் தமிழ் ஈழந்தான் முடிவு என்று சொல்லிக்கொண்டிருந்தால் பத்திரிகைக்கு ஆதரவும் கூடலாம். ஆனால், மக்களின் நலனுக்கு எதிராக, தற்போதைய யதார்த்தத்துக்கு முரணாக என்னால் எதுவும் கூறமுடியாது. இருக்கின்ற யதார்த்தம் இதுதான். இப்போதைக்கு, இதனைப் பெற்று, இதிலிருந்துதான் முன்னேற வேண்டும்.

அதேவேளை, வரைபு வந்துவிட்டது என்பதால் எல்லாம் கிடைத்துவிட்டது என்று அர்த்தம் அல்ல. அதனைச் சட்டமாக்க இன்னமும் நீண்ட தூரம் போயாகவேண்டும். அதற்கு நிறைய உழைப்பும், ஒருங்கிணைப்பும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன.. இங்குதான் அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் நடவடிக்கைகள் பொறுப்பற்று இருக்கின்றன. தமது கட்சிகளின் நலனில் இருந்து பார்ப்பது என்ற நிலைப்பாட்டில்



இருந்து அவர்கள் மாறியாக வேண்டும். மக்களின் நலனை முன்னிறுத்த வேண்டும்.

இந்த வரைபை பிரதமர் முன்வைக்க, முன்பு கூறியது போல மஹிந்த ராஜபக்ஷ தரப்பு அதனை நிராகரித்துவிட்டது. அது ஒருபுறமிருக்க, பிரதமரே இந்த விடயத்தில் பூரண பொறுப்புடன் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் இருக்கிறது. அவரது கட்சியில் ஒரு தரப்பினரே இதனை இன்னமும் எதிர்க்கிறார்கள் என்று தெரிகிறது. தான் வரைபை சமர்ப்பிக்க முன்னதாக பிரதமர் தனது கட்சி உறுப்பினர் மத்தியில் ஒரு இணக்கப்பட்டை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதனை அவர் செய்ததாகத் தெரியவில்லை. இது ஏமாற்றமளிக்கிறது. அவருக்கே இந்த வரைபு பிடித்திருக்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் அளவுக்கு அது செல்கிறது.

அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனான இந்த வரைபை ஏனைய தமிழ் கட்சிகள் பலவும் எதிர்க்கின்றன. அவர்கள் அனைவருக்கும் கிடைப்பதை பெற்றுக்கொண்டுதான் அடுத்த கட்டத்துக்கு முன்னேற வேண்டும் என்பது தெளிவாகத் தெரியும். ஆனாலும் அவர்கள் எதிர்க்கிறார்கள். அது அவர்களது தவறு என்றால் அந்த தவறை அவர்கள் செய்யத் தூண்டியதில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் பொறுப்பு இருக்கிறது. இந்த வரைபை மக்கள் நலனுக்காக கொண்டு வந்ததாகக் கூறும் அந்தக் கட்சி ஏனைய தமிழ் கட்சிகளுக்கு நிலைமையை விளக்கி ஒரு இணக்கப்பட்டை ஏற்படுத்த ஏன் முனையவில்லை. அவர்களை இணங்க வைக்க அல்லது அவர்களுடன் பேச முடியவில்லை என்று கூறமுடியாது. உள்ளூராட்சி ஆட்சியை அமைக்க அவைகளுடன் பேசி இணக்கம் காண முடியுமானால், ஏன் இதற்கு முடியாது? (நாங்கள் ஆதரவு கேட்கவில்லை, அவர்களாகத்தான் தந்தார்கள் என்ற கதையாடல் எல்லாம் பேச்சுக்கும் உதவாதவை.) இன்னுமொரு விடயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் வட்டாரங்களில் இருந்து கொஞ்சம் இரைச்சல் கேட்பதையும் மறுப்பதற்கில்லை. தமிழரசுக் கட்சி தம்முடன் கலந்தாலோசிக்காமல் செயற்படுவதாக அவர்கள் குறைபடுகிறார்கள். இவை எல்லாவற்றையும் விட சிங்கள மக்கள் இதனை விரும்பமாட்டார்கள் என்றால், அவர்களுக்கு இதனை விளக்க போதுமான நடவடிக்கைகளை எவரும் எடுக்கவில்லை. குறிப்பாக பெரும்பான்மையினக் கட்சிகள் இந்த விடயத்தில் பெரும் தவறிழைக்கின்றன. தமது ஆட்சி பறிபோன போது அவ்வளவு உக்கிரமாக எல்லோருடனும் கைகோத்துப் போராட முடியும் என்றால், சிறுபான்மை இன மக்களின் நலனுக்காக பொறுப்புள்ள இந்த அரசியல் கட்சிகள் ஏன் கைகோக்கக் கூடாது.

தமக்கிடையே ஒரு இணக்கத்துக்கு வராத தமிழ் கட்சிகள் மக்களுக்கு எங்கே இவற்றை விளக்கப்போகிறார்கள் என்றும் தெரியவில்லை. இப்போதைக்கு பாதிக் கிணறுதான் தாண்டியிருக்கிறீர்கள். அதனை பாரட்டுகிறோம். குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை. ஆனால், கரணம் தப்பினால் மரணந்தான். நிலைமையை உணர்ந்து செயற்படுங்கள். காலம் கடந்துவிடவில்லை. இப்போதாவது அடுத்த நடவடிக்கைகள் மேம்பட்டவையாக இருந்தால் வெற்றிக்கு வாய்ப்பு இருக்கிறது. நல்லவை நடக்கும்போது நாமும் கூட இருப்போம்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## நம்மள கல்வியிலும் ஊஞ்செழும்ப விடமாட்டாங்க



'நம்மள கல்வியிலும் ஊஞ்செழும்ப விடமாட்டாங்க, நம்மடவங்களும் இப்படியானத பார்க்கமாட்டாங்க, நம்மட பிள்ளைகளும் முன்னுக்கு வறாது கஸ்டம்தான் போல' என குறிஞ்சாமுனை சந்தியில் நின்று பற்குணம் மணியிடம் புறுபுறுத்துக் கொண்டிருந்தான்.

அப்படி என்னத்தப்பற்றித்தான் பற்குணம் புறுபறுத்துக்கொண்டான் என நீங்க எல்லோரும் யோசிக்கக் கூடும், நம்ம எல்லோருக்கும் வராத யோசினைதான் பற்குணத்திற்கு வந்தது. அதுநம்மட படுவான்கரையைப் பற்றிய சிந்தனை. ஆசிரியர் இடமாற்றமொன்று அண்மையில் நடந்தது. அந்த இடமாற்றத்தால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலிருந்து பலபேர் போயிட்டார்கள். ஆனா சிலபேர்தான் வந்திருக்காங்க. இதனால் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையாம். இதைகேள்விப்பட்டதில் இருந்து பற்குணத்திற்கு இருக்கவே முடியவில்லை. காணுற இடத்தில வைத்து, காண்கின்ற தெரிந்த அனைவரிடமும் தனது ஆதங்கத்தினை கொட்டித்தீர்த்து வருகின்றான். அவ்வாறு கண்டவர்களில் ஒருவர்தான் மணி. அவரிடமும் தனது ஆதங்கத்தினை வெளியிட்டான்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப்பகுதியை உள்ளடக்கியதாக கல்வி வலயமொன்று உருவாக்கப்பட்டது. உருவாக்கப்பட்டதன் மூலமாக இப்பிரதேசத்தில் பலகல்வியாளர்களை உருவாக்கலாம் என்று எல்லோரும் எண்ணினர். அவ்வெண்ணம் நல்லெண்ணம்தான். ஆனால், அது நிறைவேற கற்பிப்பதற்கு ஆசிரியர் வேண்டும். ஆனால் இவ்வலயம் ஆரம்பிக்கப்பட்டதி லிருந்து இற்றைவரை ஆசிரியர் பற்றாக்குறையுடனே இருந்து வருகின்றது. இதன் காரணமாக இலங்கையில், பொதுப்பரீட்சைகளில் இறுதி வலயமாக இருந்து வந்தது. இறுதி நிலை என்பதில் இருந்து 2017ல் மாற்றமடைந்து முன்னோக்கி நகர்ந்திருந்தது. இவ்வாறான தருணத்தில்தான் 2018ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆசிரியர் இடமாற்றம் அறிவிக்கப்பட்டு, அதற்கான மேன்முறையீடுகளும் செய்யப்பட்டு ஆசிரியர்களுக்கான இடமாற்றக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வடிப்படையில்தான் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலிருந்து 102ஆசிரியர்கள் வெளி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். ஆனால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கோ 28ஆசிரியர்கள் மாத்திரம் வருகைதந்துள்ளனர். இதனால் கல்வி வலயத்தில் ஏற்கனவே இருந்த ஆசிரியர் பற்றாக்குறையுடன் மேலும் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

மாணவர்களின் கல்வியில் ஆரம்பப்பிரிவு கற்பித்தல் என்பதே மிகவும் அவசியமானது. ஆரம்பப்பிரிவு கற்றல், கற்பித்தலின் மூலமே மாணவர்கள் இடைநிலைக்கல்வியையும், உயர்நிலைக்கல்வியையும் சிறப்பாக பெற்றுக்கொள்ள முடியும். ஒரு வீடு நிலைக்க வேண்டுமாகவிருந்தால் அதன் அத்திவாரம் உறுதியானதாக அமையவேண்டும். அத்திவாரம் உறுதியில்லாவிட்டால் வீடு சரிந்துவிடும். இதே நிலைதான் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் நிலையும், தற்போதைய நிலையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 65ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். இதன்காரணமாக ஆரம்பப்பிரிவு வகுப்புக்கள் கற்றல், கற்பித்தல் இன்றி காணப்படுகின்றன. இவ்வாறான நிலை வலயம் ஆரம்பிப்பதற்கு முன்னரும் இருந்தமையால் பல மாணவர்கள் அரசாங்கப் பாடசாலையில் கற்று எழுத, வாசிக்க தெரியாதவர்களாக சமுகத்திலே உருவாகியுள்ளனர். அதேநிலையை தொடர்ந்தும் உருவாக்கும் முயற்சியாகவே மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கான ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் பற்றாக்குறையை நோக்கமுடியும் எனக்கூறினான் பற்குணம்.

நாளுக்கு நாள் நவீன கண்டுபிடிப்புக்களும், புதிய புதிய உபகரணங்களும் பயன்பாட்டிற்கு வருகின்ற நிலையில், பிரத்தியேக வகுப்புமின்றி, ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களும் இன்றி எழுத, வாசிக்கத் தெரியாமல் ஒரு சமுகம் உருவாக்கப்படுதாகவிருந்தால் இதற்கு காரணமானவர்களாக அரசாங்கமே இருக்கமுடியும். அவ்வாறாயின் அனைவருக்கும் சமமான கல்வி என்ற நிலை மாறி பக்கச்சார்பான கல்வியே புகட்டப்படுவதாக பார்க்க முடியும். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள சில வலயங்களில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் ஆசிரியர்கள் பற்றாக்குறையுடனே மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் காட்சியுறுகின்றது.

மூன்று தசாப்த யுத்தத்தில் பாதிக்கப்பட்டு சகல துறைகளையும் இழந்து நிற்கும் மட்டக்களப்பு மேற்கு மக்களுக்கு, கல்வியென்பதும் எட்டாக்கனியாகிவிடக்கூடாது. அவ்வாறு ஆக்கப்பட்டால் இதற்கு வகைகூறவேண்டியவர்களாக இச்சமுகத்தில் உள்ள

**படுவான் பாலகன்**

அரசியல்வாதிகளும், சமுகத்தினரும் உள்ளனர். மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சியினை செய்ய வேண்டியவர்களாக மக்கள் பிரதிநிதிகள் உள்ளனர். அவற்றினை செய்யத்தவறின் அவர்களுக்கு வாக்களித்த மக்களே இதற்கான பொறுப்புக்கூறக்கூடியவர்களாக மாறுகின்றனர் என்பதே மணியின் கருத்தாக அமைந்திருந்தது. எது எவ்வாறு இருப்பினும், விரைந்து மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யாவிட்டால், அடுத்துவருகின்ற இடமாற்றங்களின் போதும், 100பேர் செல்ல 20பேர் வருவதனை தடுக்க முடியாமலே செல்லும். இது தொடர்ந்தால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள பல பாடசாலைகளை ஆசிரியர்கள் இன்றி மூடும் நிலையேற்படுவதையும் தவிர்க்க முடியாமலே செல்லும். இவ்விடயங்களை கருத்தில் கொண்டு அனைவரும் முயற்சிகள் எடுக்காவிட்டால் மட்டக்களப்பு மேற்கு மக்கள் கல்வியில் பின்நிலையை பெறுவதை தவிர்க்க முடியாமலே போகும்.

## நிலவில் வளர்ந்த தாவரம்

### வரலாற்றில் முதல் முறையாக நிலவில் ஒரு தாவரம் முளைத்துள்ளது.

சீனாவின் சாங்'இ4 ரோபோட்டிக் ஆய்வு விண்கலம் மூலம் நிலவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட விதைகள் முளைத்துள்ளன என்று சீனாவின் தேசிய விண்வெளி முகமை தெரிவித்துள்ளது.

நிலவில் உயிரின வளர்ச்சி முதன் முறையாகக் காணப்பட்டிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியில் நீண்டகால நோக்கில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாக இது கருதப்படுகிறது.

சாங்'இ4 நிலவின் மறுபக்கத்தில் தரையிறங்கியபின் மேற்கொள்ளப் பட்டிருக்கும் முதலாவது ஆராய்ச்சி முயற்சியாகும் இது. பூமியை நோக்கியே இருக்கும் நிலவின் பக்கத்தில் அல்லாமல், மறுபுறத்தில் இருளாக இருக்கும் பகுதியில்



இந்த விண்கலம் தரையிறங்கி ஆய்வு மேற்கொண்டிருக்கிறது.

ஜனவரி 3 ஆம் தேதி தரையிறங்கிய இந்த விண்கலத்தில், அந்தப் பகுதியில் உள்ள நிலவின் மண்ணை ஆய்வு செய்வதற்கான கருவிகள் உள்ளன.

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் முன்பு தாவரங்கள் வளர்க்கப் பட்டிருக்கின்றன. ஆனால் நிலவில் ஒருபோதும் இது நடந்தது கிடையாது.

நிலவில் தாவரங்களை வளர்க்கும் திறன் இருப்பது, நீண்டகால விண்வெளித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கு உதவும். இரண்டரை ஆண்டு காலம் பிடிக்கும், செவ்வாய் கிரகப் பயணம் போன்ற, விண்வெளித் திட்டத்துடன் இணைந்ததாக இது இருக்கும்.

விண்வெளி வீரர்கள் உணவுத் தேவைக்காக பூமிக்கு திரும்பி வருவதற்கான தேவை இல்லாமல், விண்வெளியிலேயே தங்களுக்கான உணவை அறுவடை செய்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

நிலவில் தரையிறங்கியுள்ள சீனாவின் விண்கலத்தில் பருத்தி, உருளைக்கிழங்கு விதைகள், ஈஸ்ட் மற்றும் பழ ஈக்களின் முட்டைகள் ஆகியவை கொண்ட மண்ணும் வைக்கப்பட்டுள்ளது.

விண்கலத்தில் சீலிட்ட கண்டெய்னரில் தாவரங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிர்கள் ஒரு சிறிய உயிரி மண்டலத்தை - ஒரு செயற்கையான, தற்சார்பு சூழலை உருவாக்குவதாக இருக்கும்.

பருத்தி விதைகள் முளைவிட்டிருப்பதாக செவ்வாய்க்கிழமை சீனாவின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

முளை விட்டுள்ள விதையின் படத்துடன் ஒரு செய்தியை, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான பீப்பிள்ஸ் டெய்லி ட்விட்டரில் வெளியிட்டுள்ளது. "நிலவில் மனிதகுலத்தின் முதலாவது உயிரின பரிசோதனை நிறைவு பெறுகிறது" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முன்னேற்றம் "நல்ல செய்தி" என்று ஆஸ்திரேலிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் விண்வெளி வீரர் பிரெட் வாட்சன் தெரிவித்தார்.

"நிலவில் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில்

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# ‘தேசிய பாடசாலைகள் அதிகார பகிர்வுக்கு எதிரானவை’

**இரா. துரைரட்ணம்**

கிழக்கு மாகாண ஆளுநராக பதவி ஏற்ற உடன் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா செய்த முதலாவது வேலை மாகாணத்திற்கு இருக்கும் அதிகாரங்களை மத்திய அரசிற்கு தாரை வார்த்ததுதான்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளையும் அம்பாறையில் உள்ள ஒரு பாடசாலையையும் தேசிய பாடசாலையாக மாற்றுவதற்கு சம்மதம் தெரிவித்து மத்திய கல்வி அமைச்சுக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா கடிதம் ஒன்றை அண்மையில் அனுப்பியிருந்தார்.

மாகாணசபைகளின் கீழ் உள்ள பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுவது மாகாணத்திற்கு இருக்கும் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்கு தாரை வார்ப்பதாகும்.

இதை உணராத சிலர் ஹிஸ்புல்லா நான்கு தமிழ் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றிவிட்டார் என மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக்குதிக்கின்றனர். ஹிஸ்புல்லாவின் அதிரடி நடவடிக்கை என மாகாணங்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் பற்றி அடிப்படை அறிவு அற்ற சில இணையத்தளங்கள் புகழந்து செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

மாகாணசபையின் கீழ் இருக்கும் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றி மத்திய அரசிடம் கையளிப்பது தமிழ் மக்களின் போராட்டங்களுக்கும் அபிலாசைகளுக்கும் எதிரானது என்ற விடயத்தை புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனையான விடயம்.

தமிழ் மக்கள் இரத்தம் சிந்தி போராடியதன் விளைவாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 13ஆவது திருத்த சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டதும் கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, விவசாயம், என்பன முழுமையாகவும், காணி பொலிஸ் மற்றும் நீர்ப்பாசனம் என்பன பகுதி அளவிலும் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்பட்டது.

இன்றும் அதிகார பரவலாக்கல் செய்யப்பட்டு மாகாண சுயாட்சி ஒன்று வழங்கப்பட வேண்டும் என்றே தமிழ் மக்கள் கோரி வருகின்றனர்.

மாகாணசபை உருவாக்கப்பட்ட போது ஆட்சியில் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் அதன் பின்னர் வந்த மத்திய அரசாங்கத்தின் தலைவர்களும் மாகாணங்களுக்கு இருக்கும் அதிகாரங்களை பறிப்பதிலேயே குறியாக இருந்தனர். வரதராஜபெருமாள் தலைமையில் வடகிழக்கு மாகாணசபை உருவான போது மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. வடகிழக்கு மாகாண பொலிஸிற்கு பொறுப்பாக பிரதி பொலிஸ் மா அதிபர் ஆனந்தராசா நியமிக்கப்பட்டதும், அதன் சிவில் தொண்டர் படை என வரதராசபெருமாள் தலைமையிலான மாகாண அரசு ஆட்சேர்ப்பு செய்ததும் பழைய சம்பவங்கள், அதன் பின் ஒரு வருடத்தில் வடகிழக்கு மாகாண அரசு கலைக்கப்பட்ட பின் அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸ மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரத்தை மீளப்பெற்றுக்கொண்டார்.

13ஆவது திருத்த சட்டத்தின் மூலம் உயர்கல்வி தவிர்ந்த கல்வித்துறையின் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

1985ஆம் ஆண்டு தேசிய பாடசாலைகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் மாகாணசபை சட்டம் கொண்டுவரப்பட்ட போது கொழும்பு நகரில் உள்ள பிரபல பாடசாலைகள் சில உட்பட 18 பாடசாலைகளே தேசிய பாடசாலைகளாக இருந்தன. இலங்கையில் உள்ள ஏனைய அனைத்து பாடசாலைகளும் மாகாணசபையின் கல்வி அமைச்சின் கீழேயே இருந்தன. குறிப்பாக வடக்கு கிழக்கில் அனைத்து பாடசாலைகளும் மாகாண கல்வி அமைச்சின் கீழேயே இருந்தன.அதன் பின் கல்வித்துறை அதிகாரத்தை மாகாண சபையிடமிருந்து பறித்தெடுப்பதற்காக மத்திய அரசு தேசிய பாடசாலை திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்த முற்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலில் புனித மிக்கேல் கல்லூரியும் புனித சிசிலியா கல்லூரியும் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டு மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதற்கான சிபார்சை செய்தவர் அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராசசிங்கம் அவர்களாவார்.

மாகாணசபைகளின் கீழ் இருக்கும் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றி மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவருவது மாகாணங்களின் அதிகாரங்களை பறித்தெடுக்கும் செயல் அல்லவா, அதிகாரப்பரவலாக்கலுக்காக



போராடும் உங்களைப்போன்றவர்கள் மாகாணத்தின் அதிகாரத்தை பறித்தெடுப்பதற்கு துணைபோகலாமா என பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் ஜோசப் பரராசசிங்கம் அவர்களிடம் நாம் கேள்வி எழுப்பிய போது, உண்மையில் இது அதிகாரப்பரவலாக்கலுக்கு எதிரான விடயம் தான். என்ன செய்வது பாடசாலை நிர்வாகங்கள் தங்கள் பாடசாலையை தேசிய பாடசாலையாக மாற்றி தருமாறு கோருகிறார்களே என பதிலளித்திருந்தார்.

தமது பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாற்றப்பட வேண்டும் என பாடசாலை நிர்வாகங்கள் விரும்பியதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று. தாம் ஓய்வு பெறும் வரை அப்பாடசாலையில் அல்லது நகர் புறத்தில் உள்ள இன்னொரு தேசிய பாடசாலையில் பணிபுரியலாம். வசதி குறைந்த கிராமபுற பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல வேண்டி ஏற்படாது என்ற சுயநல நோக்கமே ஆகும்.

தேசிய பாடசாலைத் திட்டம் என்பது சமனான வளப்பங்கீட்டு கொள்கைக்கு எதிரானதாகும்.

1990ஆம் ஆண்டில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 18ஆகும். ஆனால் இன்று நாடு முழுவதிலும் 350க்கு மேற்பட்ட தேசிய பாடசாலைகள் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கூட்டு மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி இருந்த போது மாகாணத்தின் அதிகாரங்களை மத்திய அரசு பறித்தெடுப்பதற்கு அனுமதிக்கவில்லை.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்திலிருந்து தற்போதைய ஜனாதிபதி வரை மாகாணசபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களை பறித்தெடுப்பதிலேயே குறியாக இருந்தனர். கடந்த மகிந்த ராசபக்ச ஆட்சிக்காலத்தில் நாடு நகர திட்டமிடல் சட்டம், திவிநெகும சட்டம் ஆகியவற்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி மாகாணசபைகளிற்கு இருக்கும் அதிகாரங்களை பறித்தெடுப்பதற்கு மத்திய அரசு முற்பட்டது. மாகாணசபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களை பறித்து பசில் ராசபக்சவின் கீழ் இருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்குவதற்கே இச்சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. இச்சட்ட மூலத்தின் நோக்கம் மாகாணசபைகளின் கீழ் இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு பசில் ராசபக்சவின் கீழ் இருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவருவதாகும்.

இது மாகாணசபை அதிகாரங்களை பறிக்கும் செயல், இதனை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். சட்டத்தரணி சுமந்திரன் அவருக்காக நீதிமன்றில் வாதாடினார்.

இந்த மனுவை விசாரித்த பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர்கள் குழாம் மகிந்த அரசுக்கு அதிர்ச்சி தரும் தீர்ப்பை வழங்கினர். அனைத்து மாகாணசபைகளின் சம்மதம் இன்றி மாகாணசபைகளுக்கு இருக்கும் அதிகாரத்தை மத்திய அரசு பறிக்க கூடாது. இச்சட்ட மூலத்திற்கு ஆதரவு வழங்கி தீர்மானம் நிறைவேற்றினால் மட்டுமே இச்சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்ற வரலாற்றுத் தீர்ப்பை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர்கள் வழங்கினர். எதிர்காலத்திலும் மாகாணசபைகளின் சம்மதம் இன்றி மாகாணசபைக்கு இருக்கும் அதிகாரங்களை மத்திய அரசு கையகப்படுத்த கூடாது என இத்தீர்ப்பில் தெரிவித்திருந்தனர். இது நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துறையான ஜனாதிபதிக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தியிருந்தது. இத்தீர்ப்பை அடுத்து பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்காவை ஜனாதிபதி மகிந்த ராசபக்ச பதவி நீக்கியிருந்தார்.

இது உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

கிழக்கு மாகாணசபை உட்பட எட்டு மாகாணங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அச்சட்ட மூலத்திற்கு அம்மாகாணங்கள் ஆதரவான தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தன. வடமாகாணசபை ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்ததால் ஆளுநர் அதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார். வடமாகாணத்தில் மக்கள் பிரதிநிதிகள் சபை இருந்திருந்தால் திவிநெகும சட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியிருப்பார்கள். பாராளுமன்றில் அச்சட்ட மூலத்தை சமர்ப்பிக்க முடியாமல் போயிருக்கும்.

அதன் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட்டின் கீழ் இருந்த கிழக்கு மாகாண சபையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் இருந்த வடமாகாண சபையிலும் இருந்த மக்கள் பிரதிநிதிகள் மாகாண சபைக்கு இருக்கும் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறிக்கும் செயல்களுக்கு இடம்கொடுக்கவில்லை.

மாகாணசபையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழலை பயன்படுத்தி ஆளுநர்கள் மூலம் மாகாணத்திற்கு அதிகாரங்களை பறிக்கும் செயல்களை தற்போது மத்திய அரசு செய்து வருகிறது. மாகாணங்களுக்கு இருக்கும் அதிகாரங்களை பறிக்கும் செயல்களில் ஜே.ஆர். தொடக்கம் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா வரை கங்கணம் கட்டி செயல்பட்டு வருகின்றனர்.

தென்னிலங்கை சிங்கள தலைவர்கள் மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதையோ அதிகாரப்பரவலை செய்வதற்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

அதன் ஒரு அங்கமாகவே கிழக்கு மாகாணத்தில் ஆளுநராக ஹிஸ்புல்லா பதவி ஏற்ற உடன் மாகாண சபைக்கு இருக்கும் அதிகாரத்தை பறிக்கும் வகையில் 4 தமிழ் பாடசாலைகளை மத்திய அரசுக்கு தாரை வார்த்திருக்கிறார்.

அதிகாரத்தை பரவலாக்கி மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கி சுயாட்சி அடிப்படையிலான அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என கோரிவரும் தமிழர் தரப்பின் அபிலாசைகளுக்கு எதிரானதாகவே இது அமைந்துள்ளது.





# சேனையூர், கட்டைபறிச்சான் பிரதேசங்களில் பட்டிப் பொங்கலும் மஞ்சு விரட்டும்

தமிழர்களின் தனித்துவ திருநாள் பொங்கல் அதிலும் தை இரண்டாம் நாள் நடை பெறும் மாட்டுப் பொங்கல் எங்கள் பிரதேசத்தில் பட்டிப் பொங்கல் என்றே அழைக்கப் படும்.

அன்றைய நாட்களில் ஒவொரு குடும்பத்துக்கும் குறிப்பிட்டளவுக்கு மாடுகள் இருந்தன மேய்ச்சல் நிலம் அதிகம் உள்ள எங்கள் ஊரில் வீட்டுக் காலையில் அடைக்கப்படும் மாடுகள் காலையில் திறந்து விட அவை மேய்ச்சல் நிலத்துக்கு போய் மாலையில் தானாகவே திரும்பி வரும்.

ஒவ்வொரு பட்டிக்கும் ஒரு மாப்பிளை மாடு இருக்கும் .மாப்பிளை மாடுகள் கொம்பனாச்சி,கொக்குதொடுவாய் ஆகிய தாவளங்களிலிருந்து வாங்கி வந்து தங்கள் பட்டியை வளம் படுத்துவர். பாலுக்கான மாடுகள் வண்டிலுக்கான மாடுகள் ஊட்டி வளர்க்கப்படும்.

எனக்கு ஆறு வயதாய் இருக்கும் போது அப்புச்சியிடம் நூற்றுக்கு மேற்பட்ட மாடுகள் இருந்தன. கால வேறு பாட்டால் அவையெல்லாம் காணாமல் போயின. அப்புச்சி ஒவ்வொரு மாட்டுக்கு செல்லப் பெயர் வைத்திருப்பார்.

கடந்த யுத்த காலம் எங்கள் ஊரில் உள்ள மாட்டுப் பட்டிகளை அழித்து விட்டன. அதிலும் குறிப்பாக எஞ்சியிருந்த மாடுகள். 2006ல் ஏற்பட்ட பெரும் இடப்பெயர்வினால் எல்லாமே அடிபட்டுப் போயின.

இன்று மீண்டும் தங்கள் பட்டிகளை படிப்படியாக மீளமைத்து வருகின்றனர்.

அன்று ஒவ்வொரு வீட்டிலும் வண்டில் மாடுகள் இருந்தன. எப்படி வீடு அமைந்திருக்குதோ அது போல "மாட்டுமால்" இருக்கும் மாடுகள் மழையில் நனையாமல் பாதுகாப்பது இவர்கள் மாடுகளுக்கு பெரு மதிப்பு கொடுத்து வாழ்ந்தனர்.

தங்களுக்கு தங்கள் தொழிலுக்கு உதவி செய்யும் மாடுகளுக்கு நன்றி சொல்லும் விழா பட்டிப்பொங்கல். பாலும் தயிருமாய் உணவைத் தரும் பசுவுக்கும் நன்றி சொல்லும் விழாவும் இதுதான்.

காலையில் வீட்டில் காளை, பசு மாடுகளுக்கு பொங்கலாய் அமைய மாலை நேரம் எருமை மாடுகளுக்கு ஊரெல்லையில் இருக்கும் கிடாமாட்டு பட்டிகளில் நடக்கும்.

"பட்டி பெருக வேணும் தம்பிரானே

பால் பானை பொங்க வேண்டும் தம்பிரானே"

இது இங்கு வழக்கில் உள்ள பட்டியோடு தொடர்பான மண்ணின் பாடல்.

பட்டிப் பொங்கலில் பொன்னாவரைப் பூ முக்கியம் பெறுகிறது. பொன்னாவரை மலர்களால் மாட்டை அலங்கரித்தலும் இலையும் பூவுமாய் இணைந்த கழுத்து மாலை. பொன்னாவரை மொட்டாலான கழுத்து மாலை, கொம்பு மாலை, தனி இதழ்களால் ஆன மாலை பல்வகை.அத்தோடு பலகார மாலை சிலுவு மாலை. நெற்றிப் பட்டம் , கொம்பு அணி என அரிசிமா பலகாரம் அழகாய் மாடுகளை அலங்கரிக்கும்.

அழகான எடுப்பான நாம்பன் மாடுகளில் காசு மாலை போடப் பட மாடு உள்ளவர் வீடுகள் விழாக் கோலம் காணும்.

பட்டிப் பொங்கல் முடிய மாடுகள் அவிழ்த்து விடப்படும் தருணத்துக்காக இளைஞர்கள் வீட்டு வாசலில் காத்திருப்பர்.

காளைகளை வீசிப் பிடிப்பதற்காக அதற்கென தயாரிக்கப்பட்ட ஆத்தி நார் கயிறுகளே பயன் படுத்தப் படும் . ஆத்தி மரத்திலிருந்து அதன் பட்டையிலிருந்து நார்களை உருவி கயிறு திரிப்பர் . பல மாதங்களுக்கு முன்பே ஆத்தி நார் கயிறுகளை தயாரித்து வைப்பர். ஆனை கூட ஆத்தி நார் கயிற்றை அறுக்க முடியாதென்று சொல்வர்.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

பொங்கல் முடிய வெளிய வரும் காளைகளை துரத்தி வீசிப் பிடித்து பலகாரம் பணம் ஆகியவற்றை இளைஞர்கள் தமதாக்கிக் கொள்வர். சிலவேளைகளில் மாடுகள் தறி கெட்டு ஓடும்.

இதுவும் ஒருவகை மஞ்சு விரட்டுத்தான். நம் தமிழ் மரபின் தொடர்ச்சிதான் இது.

---

# இது எங்கள் பொங்கல்

காலத்திலிருந்து நீங்கிப் போன சின்ராசு மாமா, மதி மாமா, பேரின்பம், கந்தசாமி, நிமால், கவரி மாமாவெல்லாம் நினைவில் வந்து புன்னகைக்கிறார்கள். சாமிக்குப் படைத்தார்களோ இல்லையோ "எங்கள் தலைசாமி இந்தப் புள்ளைகள் தான் முதலாளி" என்று சூரியன் சூடேறும் முன் வீட்டுக்கு ஓடிவந்து எங்களைக் கொஞ்சிப் போன அவர்களுக்காக நெஞ்சு புடைக்கிறது.

எனக்குத் தெரிந்து பொங்கலுக்கும் புத்தாடை உடுத்திய ஒரே முஸ்லிம் குடும்பம் ஏறாவூரில் அப்போது நாங்கள் மட்டும்தான். வாப்பாவுக்கு இருபது தாண்டி புத்தாடைகள் அன்பளிப்பாக வந்து குவியும். நினைவு தெரிந்து வாப்பா தனக்கென்று புத்தாடை வாங்க அவசியப்பட்டதேயில்லை.

"எல்லாரும் புறப்புட்டு ரெடியா இருங்க சின்ராசு மாமா வந்து கூட்டிப்போவார்" என்று உற்சாகமாக மீண்டுமொரு முறை வாப்பாவின் குரல் ஒலிக்காதா என்றிருக்கிறது.

சின்ராசா மாமா ஊறணியிலிருந்து மனைவி பிள்ளைகளோடு வந்து எங்களையும் கூட்டிப்போய் பொங்கலுக்கு புது உடுப்பு வாங்கிய காலம் நெஞ்சை அறுத்துக் கண்களை ஈரமாக்குகிறது.

சாதி வேறுபாட்டால் சவாலுக்குள்ளான அவர்கள் காதல் கல்யாணம் இந்திய இராணுவ கெடுபிடியான காலத்தில் எங்கள் வீட்டில்தான் இரகசியமாக நடந்தேறியது. அதுவரையும் உடுப்பு வெளுக்கும் தொழிலைச் செய்துவந்த சின்ராசாவை படகும், வலையும் வாங்கிக் கொடுத்து வாப்பா சின்ன முதலாளியாக்கினார். அவர்கள் கல்யாணத்தில் மாமாவின் மடியில் நான் அமர்ந்திருந்த புகைப்படம் இப்போதும் அவர்களிடம் இருக்கவேண்டும்.

நீங்கள் நாங்கள் என்றில்லை "நாம்" ஆகத்தான் சின்ராசா மாமா இந்த வாழ்வை விட்டு நீங்கும் வரை வாழ்ந்தார். காலங்கள் கடந்து வாப்பாவுக்கு இதய அமுத்தம் வந்து மருத்துவமனையில் படுக்க நானும் தம்பியும் எதிர்பாராமல் வியாபாரத்தைக் கவனிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். வியாபாரத்தில் வாப்பாவுக்கு சின்ராசா துரோகங்கள் செய்தார் என்று நம்பி நானும் தம்பியும் விரல் நீட்டியபோது வாப்பா மாமா பக்கம்தான் நின்றார். "உங்களுக்கு நாங்களா அவரா முக்கியம்" என்று தம்பி ஆத்திராவேசமாக அழுது சிவந்த கண்களுடன் கேட்ட போது வாப்பா சிறிதும் தயங்காமல் சொன்னார், "எனக்கு அவன்தான்டா முக்கியம். உன்ட கணக்கு விசாரணையெல்லாம் குப்பையில் போடு".

ஷர்மிளா செய்யத்



நாங்கள் மனமுடைந்து வெறுத்து நின்றபோது தயக்கத்துடன் ஒருநாள் இரவு வீடேறிய சின்ராசா மாமாவும் மனைவியும் அன்றெல்லாம் அழுது ஓலமிட்டுத் தங்கள் நியாயங்களைக் கூறியபோது நாங்களும் கலங்கி அழுதோம். இந்த முரண்பாட்டால் எங்கள் அன்பில் எதுவித விரிசலும் விழுந்து விடாத அழகை பின்னாள் அனுபவங்களில் கண்டு வாப்பாவிடமும் மாமாவிடமும் மன்னிப்புக் கோரினோம்.

அவரது மகள் கல்யாணம் எங்கள் வீட்டுக் கல்யாணமாக நடந்தது. முஸ்லிம் நண்பர்களுக்காக முஸ்லிமான சமையல்காரர், ஹலாலான மாடு, கோழி என்று மாமா பார்த்துப் பார்த்துச் செய்தார். அவர்கள் வீட்டில் கல்யாணத்திற்காக நான்கு நாட்கள் தங்கியிருந்தோம்.

எங்களின் இந்த அனுபவங்கள் பிள்ளைகளுக்கு வெறும் கதைகளாக மட்டுமேயான இந்த வாழ்வை எண்ணி மனம் நோகிறது. பொங்கல் நாட்களில் முன்புபோன்ற குதூகலங்களின்றி மனம் இறுக்கமாகி விடுவது இயல்பாகவே நடக்கிறது.

பொங்கலும், பொங்கலோடு அன்பையும் அளித்த அவர்களுக்கு அஞ்சலி! எத்தனை பொங்கல் யார் அளித்தாலும் இனி அந்தப் போர்க்காலப் பொங்கலும் முந்திய பிந்திய உறவும் திரும்ப வராது



# பட்டறிவு

## ஊடக மாபியாவின் எழுச்சி!

அட்டவணை 13.28

வெகுசன ஊடகம் 2008 - 2017

| விடயம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செய்தித்தாள்களின் சுற்றோட்டப்பிரதிகள்(ஆ)** | | | | | | | | | | |
| நாளாந்த செய்தித்தாள்கள், '000 | 161,578 | 164,547 | 170,240 | 173,255 | 228,269 | 334,348 | 345,029 | 383,129 | 411,760 | 398,759 |
| சிங்களம் | 117,136 | 123,245 | 126,730 | 128,163 | 156,375 | 210,805 | 206,979 | 226,490 | 258,995 | 245,103 |
| தமிழ் | 12,927 | 9,347 | 8,884 | 10,194 | 28,748 | 47,302 | 62,625 | 75,906 | 60,969 | 60,249 |
| ஆங்கிலம் | 31,516 | 31,955 | 34,627 | 34,897 | 43,146 | 76,241 | 75,424 | 80,734 | 91,796 | 93,407 |
| ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு ஒரு நாளுக்கான பிரதிகள், எண்ணிக்கை | 25 | 26 | 26 | 27 | 36 | 52 | 53 | 58 | 62 | 59 |
| வாராந்த செய்தித்தாள்கள் '000 | 86,696 | 82,801 | 80,295 | 88,281 | 90,403 | 106,574 | 117,544 | 124,949 | 127,064 | 136,307 |
| சிங்களம் | 64,178 | 62,096 | 62,948 | 70,453 | 66,710 | 68,699 | 74,960 | 80,811 | 83,288 | 91,461 |
| தமிழ் | 8,007 | 7,071 | 3,233 | 3,964 | 9,698 | 15,432 | 20,335 | 21,653 | 19,324 | 19,479 |
| ஆங்கிலம் | 14,511 | 13,635 | 14,115 | 13,864 | 13,995 | 22,443 | 22,250 | 22,485 | 24,452 | 25,367 |
| ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு ஒரு வாரத்திற்கான பிரதிகள், எண்ணிக்கை | 84 | 78 | 75 | 81 | 85 | 100 | 109 | 115 | 115 | 122 |
| **தொலைக்காட்சிகள்** | | | | | | | | | | |
| தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை | 18 | 20 | 21 | 22 | 25 | 25 | 25 | 25 | 24 | 22 |
| **வானொலிகள்** | | | | | | | | | | |
| வானொலிப் பணிகளின் எண்ணிக்கை | 56 | 48 | 51 | 51 | 54 | 54 | 54 | 54 | 54 | 55 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) தேசிய செய்தித்தாள்கள் மட்டும்

மூலங்கள்: அசோசியேற்றட் நியூஸ்பேப்பர் ஒவ் சிலோன் லிமிடெட், எக்ஸ்பிறஸ் நியூஸ்பேப்பர் (சிலோன்) லிமிடெட், சுமதி பப்ளிக்கேசன்ஸ், உபாலி நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட், விஜய பப்ளிக்கேசன்ஸ் லிமிடெட், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

இன்று மக்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தும் பெருவாரியான ஊடகங்கள் அரசியல் வாதிகளினாலும், கார்ப்பரேட் நிறுவனங்களாலுமே வழிநடத்துப்படுகின்றன. இலங்கையின் வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு சமகால ஊடக போக்கில் இந்த நிலை உச்சத்தை அடைந்திருக்கிறது என்றே கூற வேண்டியிருக்கிறது.

சமீபகாலமாக இலங்கையின் பிரபலமான ஊடகங்களின் பக்க சார்பை தெளிவாக இனங்கான முடிகிறது. அரசியல் குழப்ப நிலைகளின் போது உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்குப் பதிலாக பொய்களைப் பரப்புவதிலும், தமது நலன்களுக்கு நெருக்கமான அரசியல்வாதிகளின் புனைவுகளுக்கு அதி முக்கியத்துவம் கொடுப்பதும் நிகழ்ந்து வருகிறது. சிவில் அமைப்புகள் இது ஒரு பாரதூரமான நிலைமை என்று கண்டிப்பதுடன் இப்படியான நிறுவனங்களுக்கு எதிராக வீதிகளில் இறங்கி போராடவும் தொடங்கிவிட்டன. குறிப்பாக மகாராஜா நிறுவனம், தெரண, ஹிரு போன்ற நிறுவனங்களுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை காண முடிகிறது.

### 77% சிந்தனையை கட்டுபடுத்துவது யார்?

பாரிஸ் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கும் RSF என்ற எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு (Reporters Without Borders – RSF) இலங்கையின் ஊடகத்துறையை கட்டுப்படுத்துபவர்கள் பற்றிய முக்கியமானதொரு ஒரு அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின்படி இலங்கையின் மூன்று குடும்பங்களும் அரசும் சேர்ந்து இலங்கையின் 77% வீதமான தொலைகாட்சி பார்வையாளர்களின் (audience) சிந்தனையைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று கருத்து வெளியிட்டிருக்கிறது. இந்த நிலைமை ஒரு அபாயச் சமிக்ஞை என்று தெரிவித்திருக்கிறது.

ராஜமகேந்திரன் குடும்பத்துக்கு சொந்தமான கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்துக்கு சொந்தமான சிரச, சக்தி, டீவி1 ஆகிய ஊடகங்கள் மாத்திரம் 22.22 % வீதமான பார்வையாளர்களிடம் சென்றடைகின்றன.

திலித் ஜெயவீர, வருணி அமுனுகம (சரத் அமுனுகமவின் மகள்) பவர் ஹவுஸ் என்கிற நிருவனத்துக்கூடாக நடத்திவரும் தெரண ஊடக நிறுவனம் 19.8 % வீதமான பார்வையாளர்களிம் சென்றடைகின்றன.

மரண தண்டனைக் கைதியாக சிறையில் இருக்கும் மகிந்த தரப்பு அரசியல்வாதியான துமிந்த சில்வாவின் சகோதரன் ரைனோர் சில்வாவுக்கு சொந்தமான ஹிரு நிறுவனம் 18.1.% வீதமான பார்வையாளர்களிடம் சென்றடைகின்றன.

அரச கட்டுப்பாட்டு ஊடகங்கள் 16.9% வீதத்தினரிடம் சென்றடைகிறது.

மக்களின் சிந்தனையை தீர்மானிப்பதில் ஊடகங்களின் பெரும்பங்கை அறிந்த அரசியல் தலைவர்கள் பலர் ஒன்றில் தமக்கான ஊடகங்களை உருவாக்கிக்கொள்கிறார்கள். அல்லது அப்பேர்பட்ட ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துமளவுக்கு அங்கே தமது ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் பிரயோகிக்கிறார்கள். அதிகாரம், பணம் என்பன இதற்காக போதிய அளவு பயன்படுத்தப்படுகிறது.

அதுபோலவே 74% வீதமான வானொலி கேட்போர்களையும் இவர்கள் தான் கட்டுப்படுத்துகிறார்கள் என்று RSF நிறுவனம் மேற்படி அறிக்கையில் விபரித்துள்ளது.

அதுபோல நான்கு நிறுவனங்களே 75.45 % வீதமான சிங்கள அச்சு ஊடக வாசகர்களிடம் சென்றடைகின்றன. விஜய, உப்பாலி, சிலோன் நியுஸ்பேப்பர் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனங்கள் ஆகியனவே அவை.

### தமிழ் ஊடகங்கள் ஆபத்தில்

தமிழ் பத்திரிகைகளின் விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை 2017, 2018 ஆகிய கடந்த இறுதி ஆண்டுகளில் வெளியான இலங்கையின் மத்திய வங்கியின் பொருளாதார – சமூக ஆய்வறிக்கை (Central Bank's Economic & Social Statistics 2017, 2018) உறுதி செய்திருக்கிறது. இந்த இரண்டும் அதற்கு முந்திய 9 ஆண்டுகால நிலவரத்தை ஆய்வு செய்திருக்கின்றன.

என்.சரவணன்

அதன்படி சிங்கள – ஆங்கிலப் பத்திரிகைளுக்கு நேராத கதி தமிழ் அச்சு ஊடகங்களுக்கு நேர்ந்திருப்பதை காண முடிகிறது. அட்டவணையைப் பார்க்க. தினசரி பத்திரிகைகள் 2014 இல் 62,625 இருந்தது 2015ஆக ஆகும்போது 75,906 அதிகரித்தபோதும், 2016 இல் 60,969 ஆகக் குறைந்து 2017இல் 60,249 வீழ்ச்சியடைந்திருப்பதையும் உறுதிப்படுத்துகின்றன. அதாவது 2014ஆம் ஆண்டை விட வீழ்ச்சியடைந்திருப்பதைக் காட்டுகிறது. (எண்ணிக்கைகளை ஆயிரங்களால் '000 பெருக்கவேண்டும்)

அதுவே வாராந்தப் பத்திரிகைகள் 2014 இல் 20,335 இருந்தது 2015ஆக ஆகும்போது 21,653 அதிகரித்தபோதும், 2016 இல் 19,324 ஆகக் குறைந்து 2017இல் 60,249 ஆக சாற்றி சிறிய வளர்ச்சியை மட்டுமே காட்டுகின்றது. ஏனைய மொழி ஊடகங்களோடு ஒப்பிடுகையில் இது பாரதூரமானது. (எண்ணிக்கைகளை ஆயிரங்களால் '000 பெருக்கவேண்டும்)

இந்த நிலைமைக்கான காரணத்தை பல கோணங்களில் இருந்து காணலாம் குறிகாட்டியாக, வாசிப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, இலத்திரனியல் சாதனங்களின் மீதான நுகர்வின் அதிகரிப்பு, இலங்கையில் தமிழ் அரசியல் சமூக விடயங்களை அறிதலில் ஏற்பட்டிருக்கக் கூடிய சலிப்பு, வாசகர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் தோல்வியடைந்திருக்கும் ஊடகப் போக்கு போன்ற இன்னோரன்ன காரணங்களை அடுக்கிக்கொண்டு செல்லலாம். ஆனால் அதேவேளை இத்தனையையும் மீறி புதிய பத்திரிகைகளைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளும் நடக்காமலில்லை. புதிய பிராந்திய பத்திரிகைகளின் வருகையையும் கவனத்திற்கொள்ளவேண்டியுள்ளன. இந்தப் பத்திரிகைளின் வரவு என்பது ஏற்கெனவே இருக்கும் பத்திரிகைகளின் மீதான கொள்கை ரீதியான போட்டியல்ல. சந்தையை மையப் படுத்தியோ அரசியல் நோக்கங்களுக்காகவோ புதிதாக வெளிவரத்தொடங்கும் இப்பத்திரிகைகள் சந்தையில் வியாபார ரீதியில் நின்று பிடிக்க முடியும் என்கிற நம்பிக்கை எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை.

ஏற்கெனவே வியாபார ரீதியில் பத்திரிகைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் காரணமாக அந்நிறுவனங்களில் ஆட்குறைப்பையும், ஊழியர்களின் மீதான வேலைப்பழு அதிகரிப்பையும், பக்க குறைப்புகளையும் செய்து தான் சமீப காலமாக சமாளித்து வருகின்றன. இந்த மாற்றங்களை செய்யும் போது தரத்தைப் பேணுவதில் பெரும் சிக்கலை எதிர்கொள்வதையும் காண முடிகிறது. சில பத்திரிகைகள் மூடிவிட்டு போய்விட்டன. சில பத்திரிகைகள் வேறு வர்த்தகர்களுக்கு விற்றுவிட்டு கிடைத்தது போதும் இத்தோடு தொலைந்தது என்று ஓடிவிட்டன. அரச விளம்பரங்களை ஏற்கெனவே பல பத்திரிகைகள் குத்தகைக்கு எடுத்துவிட்டன. இன்னும் தனியார் விளம்பரங்களும் கூட தற்போதைய உள்நாட்டுப் பொருளாதாரச் சூழலின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன. ஏற்கெனவே பலபத்திரிகைகள் தனியார் விளம்பரங்களைப் பெறுவதில் போட்டாபோட்டியை எதிர்கொண்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழ் ஊடகங்களின் வீழ்ச்சிக் காலம் ஆரம்பமாகிவிட்டது. வீழ்ச்சி என்பது விற்பனை, விநியோகத்தில் மாத்திரமல்ல தரத்திலும் தான். இத்தனையையும் மீறி புதுப்புதுப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்கிற செய்திகள் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. வேறு போட்டியாளர்களை உள்ளே நுழைய விட்டுவிடக்கூடாது என்பதற்காக தாமே அந்த இடத்தில் இன்னொரு நிறுவனத்தை நடத்துவது முதலாளித்து நாடுகளில் உள்ள கார்பரெட் மூலதனங்களின் வியாபார உத்தி மேற்கு நாடுகளில் பிரபல்யம். ஏராளமான உதாரணங்களை இதற்கு காண்பிக்கலாம். அதே போக்கை இலங்கையில் கடைப்பிடிக்கும் தமிழ் ஊடக நிறுவனங்களும் உள்ளன. இவை ஊடகத்துறைக்கும், வாசகத்தனத்துக்கும், கருத்துருவாக்கச் செயற்பாட்டுக்கும் மிகப் பெரும் ஆபத்தே.

பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களைப் பொறுத்தவரை அவர்களின் கருப்புப்பணத்தை வெள்ளையாகுவதற்காக ஊடக நிறுவனங்களை வைத்து இயக்குகின்றன. கூடவே தமது அரசியல் தலையீட்டை செய்வதனூடாக தமது வியாபார நடவடிக்கைகளின் மீதான அரச சலுகைகளைப் பெறுவதற்கு பயன்படுத்துகின்றன.

துரதிர்ஷ்டவசமாக இப்படியான நிறுவனங்களின் ஏகபோகத்தை தகர்த்து ஊடகத் தரத்தைக் காக்கவேண்டும் என்று கிளம்பியவர்களும் கூட சற்றும் அந்த ஏகபோகத்துக்கு சவாலாக நெருங்கவும் முடியவில்லை. ஆனால் அதற்கான இடைவெளி இருக்கவே செய்கிறது. மத்திய வங்கியின் அறிக்கை வெளியிட்டுள்ள முக்கிய தரவுகளை சகல ஊடகங்களும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கையில் தமிழ் ஊடகங்களின் தரமான இருப்புக்கு புதிய திசைவழியையும், தந்திரோபாயத்தையும் வேலைத்திட்டத்தையும் வகுக்க வேண்டியிருக்கிறது என்பது மட்டும் புரிகிறது.

கூடவே அரசியல் சக்திகளை சார்ந்து அராஜகத் தன்மையுடன் எழுச்சியடையும் ஊடகப் போக்கும் ஊடக அறத்தின் எதிர்காலத்தை எச்சரித்து நிற்கின்றன.


NIRUTHA
HOTEL
NIRUTHA
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com
அரங்கம் செய்திகளுக்கான
ஆதரவில் கைகோர்ப்போம்' -
ஹொட்டல் நிருத்தா
Hotline: +94 717 412 292


NCL
NELSON COLLEGE LONDON
Now Enrolling
Are you 18+
CALL US
Business Course:
0208 514 0033
Hospitality Management:
0203 500 0239
Why Us
We provide:
• One to One support
• Flexible Timetable
• National and international course-based events & tours
• Employer introduction
• Job placement
Courses
• HND Business
• HND Hospitality Management
• BA (Hons) Top Up in Business
• BA (Hons) Top Up in Hospitality Management
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# மட்டு மாநகர சபை

## நுட்பம் காண்



நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஓர் மாநகரை கட்டியெழுப்பும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகர சபையும், I Community தொழினுட்ப நிறுவனத்தினரும் இணைந்து நடாத்திய விஷேட செயல் விளக்க அமர்வானது மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் செவ்வாய்க்கிழமை மாலை (15.01.2019) காந்தி பூங்கா முன்றலில் இடம்பெற்றது.

நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கோடும், புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் இச்செயல் விளக்க அமர்வானது அமைந்திருந்தது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் தற்கொலைகளுக்கு தீர்வாக நவீன தகவல் தொழினுட்பத்தின் ஊடாக நம்பகமான உளவள ஆலோசனைகளை வழங்குவது தொடர்பாகவும், அடிக்கடி தற்கொலைகள் இடம்பெறும் கல்லடிப் பாலம் போன்ற இடங்களை முழுமையான டிஜிட்டல் உட்கட்டமைப்புடன் கண்காணித்து முன் ஆயத்த எச்சரிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

அது மட்டுமன்றி மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் பிரச்சனைகளை மாநகர முதல்வரிடம் தெரியப்படுத்தி அவற்றுக்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பொதுமக்களுக்கான "முதல்வரிடம் சொல்லுங்கள்" (Tell to Mayor) எனும் வலைத்தளமும் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தின் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஷ், மாநகர சபையின் பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜெயன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகவர் நிலையத்தின் வளவாளர் கசுன் ஆகியோர் கலந்து கொண்டு தகவல் தொழினுட்ப ரீதியாக பல்வேறு துறைகளில் தமது திட்டங்களை முன்மொழிந்த திறன்சார் வல்லுனர்களைப் பாராட்டியதோடு அவர்களுக்கான பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையும் மக்கள் கருத்தும்




சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ---

மட்டக்களப்பு மாநகர சபை அதன் பிரதேசத்தில் வாழும் மக்களின் கருத்துக்களை அறிந்து அவர்களது ன்னூட்டங்களுக்கு அமைவாக 2019ஆம் ஆண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முன்வந்துள்ளது. இதற்காக தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான இலத்திரனியல் மக்கள் கருத்தறியும் முறைமையை பிரயோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலத்திரனியல் பிரஜைகள் அறிக்கை அட்டை (eCRC- Electronic Citizen Report Card) என்னும் மக்கள் கருத்தறியும் முறைமையானது ஆசிய மன்றத்தினால் இலத்திரனியல் முறையில் ஆண்ட்ராய்ட் செயலிகளைப் பயன்படுத்தி ஜி.பி.எஸ் இணைப்புடனானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சி.பிரகாஷ் தலைமையிலான குழுவினர் கணிப்பீடும் மேற்பார்வையும் செய்கின்றனர்.

இக் கருத்துக் கணிப்பில் மாநகர சபை வழங்கும் பிரதானமான பன்னிரண்டு சேவைகளைப் பற்றியதாக 48 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 20 வட்டாரங்களில் மாதிரிகளாக 1573 குடியிருப்பாளர்களிடம் கடந்த 2018 நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட பின்னூட்டலின் அடிப்படையில் முடிவுகள் பகுத்தாராயப்பட்டன.

பெறுபேறாக மாநகர சபையின் சேவைகளில் கழிவகற்றல், வீதி விளக்கு, பொது நூலக சேவைகள், பூங்காக்கள், தாய்சேய் நிலையப் பராமரிப்பு, போன்ற சேவைகள் ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்பட்டதுடன், வீதிகளைப் பராமரித்தல், மயானங்களை

**அன்பழகன் குரூஸ் (JP)**
***M.A, P.G.Dip in Edu, Dip in LG***

பராமரித்தல், விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல் போன்ற சேவைகளில் எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற பின்னூட்டல் மக்களால் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு மக்களால் வெளிப்படுத்தப்பட்ட பின்னூட்டங்களை கடந்த 18.12.2018 அன்று மட்டக்களப்பு மாநகர சபையின் கௌரவ முதல்வர் தி.சரவணபவான் தலைமையிலான மாநகர ஆணையாளர் திரு. கா.சித்திரவேல், கௌரவ பிரதி முதல்வர் திரு.க.சத்தியசீலன், கௌரவ உறுப்பினர்கள், பிரதி ஆணையாளர் திரு.ந.தனஞ்செயன், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பெறுபவர்களின் உண்மைத் தன்மையை புரிந்து கொண்டு இதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தை திட்டமிட வேண்டுமென சகலரும் ஏற்றுக்கொண்டனர்;.

# இதுவும் ஒரு நல்ல ஐடியா



எமது மட்டு நகர் பொது வாசிககசாலையில் மிகவும் பழமையான புத்தகங்கள் காணப்படுகின்றன.

இவற்றை மென்பதிப்புச் (soft Copy) ஆக்குவதன் முலம் இவற்றை பாதுகாக்கலாம் இவ்வாறு எல்லா புத்தகங்களையும் மென்பதிப்பு செய்து ஒரு மல்டி மீடியா வாசிககசாலையை உருவாக்குவதன் முலம் இடப்பற்றாக்குறையையும் புத்தகங்களின் எதிர்கால பாதுகாப்பையும் உறுதிப்படுத்தலாம்.



அதேபேல இளம் எழுத்தாளர்கள் டியிட்ல் (digital) பதிப்புரிமையையும் செய்து ஊக்குவிக்கலாமே

**லியோண்**

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# 'ஒற்றைப்பனைமரம்' - உலகம்வியந்து பார்க்கும் ஒரு ஈழத்து முழு நீளச் சினிமா



கனகராயன்குளத்தில் பிறந்த புதியவன் இராசையா ஈழத்து சினிமா வரலாற்றில் மிக முக்கியமானவர். இவர் ஏற்கனவே 'மண்' என்ற ஈழத்துச் சினிமா மூலம் பிரபலமானவர். பல படங்களை இயக்கி பலராலும் பாராட்டப்பட்ட அவர் மீண்டும் 'ஒற்றைப்பனைமரம்' என்ற ஈழத்துப்படத்தை இயக்கி முடித்துள்ளார்.

வெகுவிரைவில் இந்தியாவின் சளஎள நிறுவனர் தணிகைவேலின் உதவியுடன் இந்தியாவின் 200 திரையரங்குகளில் வெளியிடப்படக் காத்திருக்கின்றது இந்தப்படம். அந்த வகையில் இவ்வளவு பிரமாண்டமாக வெளியிடப்படும் முதல் ஈழத்துப்படம் என்ற சாதனையை தன்வசமாக்கியுள்ளது இந்தப்படம். இது போதிய ஆதரவு இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் நம் நாட்டின் சினிமாவுக்கு உந்துசத்தியாக அமைந்துள்ளது. அதை விடவும் இந்தப்படம் வெளியிடப்படமுன்னமே உலகளாவிய அளவில் இருபதிற்கும் மேற்பட்ட விருதுகளைத் தன்வசப்படுத்தியுள்ளது. போரிற்குப்பின்னான வாழ்வியலை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்திற்கு இலங்கை தணிக்கைக்குழுவின் அனுமதி கிடைத்தால் வருகின்ற பங்குனி மாதம் இலங்கையிலும் இந்தப்படம் வெளியிடப்படும். இந்தப்படத்தை எழுதி இயக்கியதுடன் முக்கிய பாத்திரம் ஏற்றும் புதியவன் ராசையா நடிக்க அவருடன் நவயுகா, அஜாதிகா புதியவன், ஜெகன் மாணிக்கம், காசி பெருமாள், தனுவன், கபில் நாத், பிரியா, நிர்த்திகா போன்றோரும் நடித்துள்ளனர். ஒளிப்பதிவினை மகிந்த அபேசிங்கவும், இசையினை அஷ்வமித்ராவும் வழங்கியுள்ளனர். எடிட்டிங்கினை பொறுப்பேற்றுள்ளார் சுரேஸ். இந்தப்படம் இதுவரை உலகளவில் செய்துள்ள சாதனைகள். 1: றோம் இண்டிபென்டன் திரைப்பட விழா, இத்தாலி( அரை இறுதித் தேர்வு) 2:ஒனிரொஸ் சர்வதேச திரைப்பட விழா; இத்தாலி( சிறந்த திரைப்பட விருது) 3: இந்தியன்னி திரைப்பட விழா; இந்தியா( சிறந்த திரைப்படம், ஜூரர் விருது) 4: மூண்டான்ஸ் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா ( சிறந்த இயக்குனர், அரையிறுதித் தேர்வு)



5: அக்கோலட் சர்வதேச பட விழா; அமெரிக்கா ( தேர்வு) 6: விம்பிள்டன் லைபிறிரி கிளப் விழா; பிரித்தானியா ( தேர்வு) 7: சி கே எவ் சர்வதேசத் திரைப்பட விழா ; பிரித்தானியா ( சிறந்த முழுநீளப் படம் விருது) 8: லண்டன் சர்வதேச அசையும்பட விருது விழா; பிரித்தானியா ( தேர்வு) 9: ரி எம் எவ் எவ் திரைப்பட விழா; ஸ்கொட்லாந்து (தேர்வு) 10: கோல்ட் மூவி எவாட்ஸ்; பிரித்தானியா ( தேர்வு) 11: டைறக்ற்லி மாதாந்த திரைப்பட விழா ( தேர்வு) 12: கிறேற் லேக் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா ( தேர்வு) 13: ஜோனெர் செலிபிறேசன் விழா; ஜப்பான்( சிறந்த படத்தொகுப்பு மற்றும் சிறந்த படம் பரிந்துரை) 14: யூரோப்பியன் திரைப்பட விழா; ரஸ்யா ( இறுதித் தேர்வு சிறந்த படம்) 15: ஓல்றனோற்றிவ் திரைப்பட விழா; கனடா( சிறந்த நடிகர் அரையிறுதித் தேர்வு) 16: சவுத் ஒளிப்பதிவுஇ திரைப்படம் மற்றும் கலை திரைப்பட விழா; சிலி ( சிறந்த இசைஇ சிறந்த ஒளிப்பதிவுஇ சிறந்த தயாரிப்பு வடிவமைப்புஇ சிறந்த கணினி வடிவமைப்புஇ சிறந்த திரைப்படம் விருதுகள்) 17: ரென்றிவ் சர்வதேச திரைப்பட விழா ; இத்தாலி( இறுதித் தேர்வு சிறந்த படம்) 18: ஏ ஆர் எவ் எவ் ; பிரான்ஸ்( குளோப் விருது) 19: வின்ட் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா( தேர்வு) 20:சர்வதேச திரைப்படம் மற்றும் இசை திரைப்படவிழா; குரோசியா ( தேர்வு) 21: அவ்றோடிற் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா ( சிறந்த இயக்குனர் விருது) 22: ஹோஸ்ற் அண்டகிறவுண்ட் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா( கௌரவ தேர்வு) 23: யூகே மாதாந்த திரைப்பட விழா; பிரித்தானியா ( தேர்வு) 24: சினிபெஸ்ற் நொவாலா விழா; இந்தியா ( அரையிறுதித் தேர்வு) 25: ஹொலிவூட் கில்ட் விழா; அமெரிக்கா( சிறந்த படம்இ சிறந்த கணினி வடிவமைப்பு விருதுகள்) 26: நியூயோக் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா( அரையிறுதித் தேர்வு) 27:யுரேசியா சர்வதேச திரைப்பட விழா; ரஸ்யா ( இறுதித் தேர்வு) 28: மைன்ட் பில்ம் சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா( சிறந்த நடிகர்இ சிறந்த திரைப்படம் விருது) 29: ரொப் இன்டி திரைப்பட விழா( ஒறிஜினல் ஐடியா விருது) 30: கட்டிங் எட்ஜ் திரைப்பட விழா; அமெரிக்கா( தேர்வு) 31: பிளாஸ்ற்ஓவ்

**சிவச்சந்திரன் சிவஞானம்**

திரைப்பட விழா; அமெரிக்கா( இறுதித் தேர்வு) 32:நவாடா சர்வதேச திரைப்பட விழா; அமெரிக்கா( சில்வ ஸகிறீன் விருது) 33: அமெரிக்கன் பில்மாற்றிக் விருது விழா; அமெரிக்கா( தேர்வு) 34:அன்ராயா சர்வதேச திரைப்பட விழா; ரேக்கி ( இறுதித் தேர்வு) 35: நிய நஸ்ரத் சர்வதேச திரைப்பட விழா; ஸ்ரேல் ( அரையிறுதித்தேர்வு)

# நீங்கள் எப்படியான நபர்

ஆங்கிலத்தில் Attractive people என்று கூறுவார்கள். அதாவது மற்றவர்களை கவரக்கூடிய குணம் உடையவர்கள்.

அது என்ன குணம்?

உங்களிடம் ஒருவர் உதவியொன்றை கேட்கிறார் என்றால் அந்த நபரிடம் உங்கள் அணுகுமுறை எவ்வாறு இருக்கும்.

நம்மில் மூன்று வகையான மனிதர்கள்



இருக்கிறார்கள். முதலாவாது வகை - உதாரணத்திற்கு ஒருவர் உங்களிடம் கொஞ்சம் பணம் தந்து உதவும்படி கேட்கிறார் அப்போது

அட நீங்கவேற, நானே ரொம்ப கஷ்டத்தில் இருக்கிறேன், இதில உங்களுக்கு எங்க இருந்து தருவது. பணம் என்ன மரத்திலா காய்க்குது? என்று முகத்தில் அடித்தாற் போல மறுத்துப் பேசுவார்கள். இவர்களது பேச்சில் நாகரீகம் என்பது துளியும் இருக்காது. இந்த நபர்களை பார்க்கும் போது உங்களுக்கு ஒரு வித வெறுப்பு தான் தோன்றும். இதற்கு தான் நான் முன்பே சொன்னேன் சிக்கனமாக இருக்க வேண்டும் என்று. நான் எல்லாம் யாரிடமும் எந்த உதவியும் கேட்க மாட்டேன் எல்லாம் சரியாக செய்து விடுவேன் என்று தற்பெருமை பேசி உங்களுக்கு அறிவுரையை அள்ளி வழங்குவார்கள். இவர்களுக்கு தன்னிடம் ஒருவர் உதவி கேட்கிறாரே அவர் நிலை என்ன, நான் இப்படி பேசலாமா என்று சிந்திக்கும் பக்குவம் கொஞ்சமும் இருக்காது.

தன்னால் செய்ய முடியாது என்பதோடு சேர்த்து உதவி கேட்பவரின் நிலையையும் தாழ்த்திப் பேசுவார்கள். இது ஒரு வகை.

அடுத்தது சில நபர்கள் இருப்பார்கள் இவர்களுக்கு மறுத்துப் பேசும் பழக்கமே இருக்காது. யார் என்ன கேட்டாலும், அதற்கென்ன செய்யலாமே, தரலாமே, உங்களுக்கு எப்படி இல்லை என்று சொல்வேன். இது தான் இவர்களது வழமையான பேச்சாக இருக்கும். ஏனென்றால் மற்றவர்கள் தம்மை பற்றி உயர்வாக எண்ண வேண்டும் என்பதே இவர்களின் ஒரே நோக்கம். எங்கே தான் இல்லை என்று சொன்னால் உதவி கேட்ட நபர் தன்னை தவறாக நினைத்துவிடக் கூடுமோ என்று நினைப்பார்கள்.

இப்படியான நபர்களை பார்த்தீர்களென்றால் இவர்கள் உதவி செய்யும் நிலையில் இருக்க மாட்டார்கள் அதே சமயம் இல்லை என்றும் மறுக்க மாட்டார்கள். இவர்களிடம் பணம் கேட்டீர்கள் என்றால் இரண்டு நாளில் தருகிறேன், இன்னொருவரிடம் வாங்கி தருகிறேன் இப்படியான ஒரு நம்பிக்கையை தருவார்கள். நீங்களும் அவர் எப்படியும் இரண்டு நாட்களில் தந்து விடுவார் என்று காத்திருப்பீர்கள் ஆனால் சரியான சமயத்தில் வந்து, நான் உங்களுக்காக எவ்வளவோ முயற்சி செய்தேன் ஆனால் கிடைக்கவில்லை நான் தர வேண்டும் என்று தான் பார்த்தேன், ஆனால் இப்படி நடக்கும் என்று நான் நினைக்கவில்லை என்பார்கள். அதன் பின் தன்னை நம்பி இருந்தவரின் நிலை என்ன என்பது பற்றி இவர்களுக்கு புரிவதில்லை அதை பற்றி கவலையும் இல்லை.

இன்னொரு வகையான நபர்கள் இருக்கிறார்கள் smart people, attractive people அதாவது புத்திசாலித்தனமாகவும் மற்றவர் மனம் கோணாமலும் தன் நிலையை எடுத்துக் கூறும் குணம் உடையவர்கள்.

இவர்களிடம் பணம் தந்து உதவும்படி கேட்டால், ஐயோ என்னிடம் இப்பொழுது அவ்வளவு பணம் இல்லையே மன்னித்து விடுங்கள், உங்களுக்கு உதவும் நிலையில் நான் இல்லையே என்று மனம் கோணாமல் அந்த இடத்திலேயே மறுத்து பேசி தன் நிலையை தெரியப்படுத்தி விடுவார்கள்.

**சகி**

பொய்யான நம்பிக்கையை அளிக்க மாட்டார்கள். நான் இன்னொருவரிடம் கேட்டு பார்க்கிறேன் ஆனால் கிடைக்கும் என்று முழுமையாக நம்பாதீர்கள்

நீங்கள் வேறு வழியில் முயன்று பாருங்கள் நானும் முயன்று பார்க்கிறேன் என்று கூறுவார்கள்.

அதே சமயம் தன்னால் முடியுமா இல்லையா என்பதை முடிந்த அளவு விரைவாகவே உங்களுக்கு கூறி விடுவார்கள். தமது பதிலில் தான் உங்களது அடுத்த முயற்சி இருக்கும் என்பதை

# அன்றும் இன்றும் - அங்கம் 03

## நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா ஐபேர்டைக்கொண்டுவா !!



ஒரு காலத்தில் குழந்தைகளை உறங்கவைப்பதற்கு தாய்மார் தாலாட்டுப் பாடுவார்கள். தலைமுறை தலைமுறையாக தமிழ்க்குடும்பங்களில் மட்டுமல்ல, ஏனைய இனத்துக்குழந்தைகளும் தாயின் தாலாட்டுக்குரல் கேட்டுத்தான் உறங்கியிருக்கின்றன.

தாலாட்டுப்பாடல்கள் பல அர்த்தங்களை பொதிந்துவைத்திருக்கும். அவற்றுக்கு ஓசை நயமும் ராகமும் இருப்பதனால் அழும் குழந்தைகளும் பரவசத்துடன் கேட்டு கண்ணயர்ந்துவிடும்.

நிலாக்காலத்தில் குழந்தைகளுக்கு உணவூட்டும்போது நிலவைக்காண்பித்து, "நிலா நிலா ஓடிவா நில்லாமல் ஓடிவா மலைமீது ஏறிவா மல்லிகைப்பூ கொண்டுவா" எனப்பாடியும், பகல்பொழுதுகளில் வீட்டுப்பறவைகளை காண்பித்து சோறூட்டியும் எமது குழந்தைகளை வளர்த்த காலமும் முன்பிருந்தது.

எனக்கு ஒரு தம்பி இருக்கிறார். அவர் எனது அக்காவின் குழந்தைகளுக்கு வீட்டில் வளர்க்கப்பட்ட கோழிகளை காண்பித்து, "கொக்கா கொக்கா வா வா" என்று ஏதோ ஒரு பாட்டுப்பாடித்தான் சோறூட்டினார். தம்பிக்கும் 63 வயதாகிவிட்டது, பேரன் பேர்த்திகளும் கண்டுவிட்டார். ஆனால், வயதுக்கு வந்து திருமணமும் செய்து குழந்தைகளும் கண்டுவிட்ட எமது மருமக்கள் இன்றும் எனது தம்பியை "கொக்காமாமா" என்றுதான் அழைக்கிறார்கள்.

அவர்களுடைய குழந்தைப்பருவத்தை அவர்களால் மறக்கமுடியவில்லை.

அன்று நாமெல்லோரும் குழந்தைப் பருவத்தில் விஜயதசமி காலத்தில் பெரியவர்களினால் ஏடுதுவக்கி வித்தியாரம்பம் செய்விக்கப்பட்டு அரிச்சுவடி எழுதி படிக்கத்தொடங்கினோம்.

இலங்கைக்கு நான் வந்திருந்த சமயத்தில் எனது அக்காவின் பேத்திக்கு ஒரு விஜயதசமி நாளன்று வித்தியாரம்பம் செய்துவைக்கச்சொல்லி அக்கா கேட்டிருந்தார். நான் ஒரு தமிழ் எழுத்தாளன் என்ற தகுதி மாத்திரம் அந்தப்பணிக்கு போதும் என்று அக்கா நினைத்திருக்கலாம்.

அன்று வீட்டில் பேர்த்திக்கு வித்தியாரம்பத்திற்கான சகல ஏற்பாடுகளும் நடந்தன. அவளுக்கு புதிய பட்டுப்பாவாடை சட்டை அணிவிக்கப்பட்டது. வீட்டின் தரையை கழுவி சுத்தப்படுத்தியிருந்தார்கள். சுவாமி அறையில் தரையில் கம்பளம் விரித்து, அதன் முன்னால் பெரிய தட்டில் பழம், வெற்றிலை மலர்களை வைத்தார்கள். குத்துவிளக்கு நிறைகுடமும் தயார். பெரிய சரஸ்வதி படமும் நிறுத்திவைக்கப்பட்டு அதற்கு மாலையும் அணிவிக்கப்பட்டது.

அக்கா, எனது மச்சானின் வெள்ளை வேட்டியும் தந்து அணியச்செய்து சுவாமி அறைக்கு அழைத்துவந்தார். கம்பளத்தில் ஒரு பெரிய எவர்சில்வர் தட்டத்தில் அரிசியும் பரப்பிவைக்கப்பட்டது.

வீட்டிலிருந்தவர்களும் தங்களை அலங்கரித்துக்கொண்டு, முன்னால் வந்து நின்றார்கள். சிலர் தங்கள் கைத்தொலைபேசியில் படம் எடுத்து, வாட்ஸ் அப் மூலம் இலங்கை உட்பட உலகெங்கும் இருக்கும் உறவுகளுக்கு அனுப்புவதற்கும் தயாராகிவிட்டனர்.

நான் அமர்ந்து பேர்த்தியை அழைத்து எனது மடிமீது இருத்தினேன். அவள், " என்னதாத்தா செய்யப்போறீங்க? " எனக்கேட்டாள். " இன்று உனக்கு தமிழ் எழுத சொல்லித்தரப்போகின்றேன். சொல்வது போல் எழுதவேண்டும் பேசவேண்டும் என்றேன். "சரி" என்று தலையை ஆட்டினாள்.

அவளது வலது கரத்தின் ஆட்காட்டி விரலைப்பிடித்து, தட்டத்திலிருந்த அரிசியில் " அ " எனச்சொல்லி எழுதவைத்தேன். எழுதினாள். அடுத்த எழுத்தை எழுதத்தொடங்கியபோது, மடியிலிருந்து எழுந்து, " தாத்தா, இது அரிசி. சோறு ஆக்குவது. " எனச்சொல்லிக்கொண்டு அந்தத்தட்டத்தை கையில் தூக்கிவிட்டாள். அக்கா விரைந்துவந்து, தடுத்து தட்டத்தை வாங்கி அதட்டினார்.

" ஆச்சிக்கு ஒன்றும் தெரியாது. இது கிச்சின்லதான் இருக்கவேணும்." என்று சொல்லிவிட்டு விருட்டென ஓடிச்சென்று, அறையிலிருந்த ஐபேர்டை எடுத்துவந்து, " தாத்தா, இதில் அ., ஆவன்னா சொல்லித்தாங்க" என்றாள்.

எல்லோரும் சிரித்தோம். நான் அக்காவையும் பேத்தியின் பெற்றோர்களையும் பார்த்து, " இவளுக்கா வித்தியாரம்பம்? இவள் உங்கள் எல்லோருக்கும் சமகால சாதனங்களில் வித்தியாரம்பம் செய்விப்பாள்." என்றேன்.

அந்தக்குழந்தைக்கு அரிசிக்கும் ஐபேர்டுக்கும் இடையிலிருக்கும் வித்தியாசம் தெரிகிறது.

எனது மகன் நான் வாழும் நாட்டிற்கு வரும்போது நான்கு வயது. தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சிகள் பார்ப்பான். ஒருநாள் தொலைக்காட்சியில் குழந்தைகள், நடுத்தர வயதினர், பெரியவர்கள் பார்க்கத்தக்க விடயங்கள் தொடர்பாக C - G - AO என்ற அடையாளக்குறிகளை விளம்பரப்படுத்தினார்கள்.

எனது இரண்டாவது மகளுக்கு அவ்வேளையில் எட்டுவயது. அவளுக்கு அந்த அடையாள எழுத்துக்கள் புரியவில்லை. அவள் எனது மூத்தமகளிடம் கேட்டாள், " அக்கா, G என்றால் என்ன? AO என்றால் என்ன?"

சற்றும் தாமதியாமல் எனது மகன் சொன்னபதில்: " G என்றால் கன்னத்தில் கொஞ்சுவது. AO என்றால் வாயில் கொஞ்சுவது. இதுகூட உனக்குத் தெரியாதா?"

வீட்டில் அந்தப்பதிலால் அசந்துபோனோம்.

**ரஸஞானி**

தற்போது எனது மகனுக்கு முப்பது வயதும் கடந்துவிட்டது. இந்த சம்பவத்தை நினைவூட்டினால், " எல்லாம் கடந்த காலம்" என்பான்.

நாகரிகம் வளரும்போது, தொழில் நுட்பங்களும் துரிதமாக மாறிக்கொண்டிருக்கின்றன. அதற்கு ஏற்ப எம்மை தகவமைத்துக்கொள்ளாதுவிடின் பின்தங்கிவிடுவோம் என்றும் சொல்கிறார்கள்.

வீட்டில் பாட்டிமாரிடம் பேரக்குழந்தைகள் கதைகேட்டு வளர்ந்த காலம் மலையேறிவிட்டது. சமகாலத்தில் பாட்டிமார் தொலைக்காட்சிகளில் கசிந்துருகும் மெகா தொடர் நாடகங்களில் மூழ்கிவிட்டார்கள். பெற்றோர் குழந்தைகளை சமாளிக்க ஐபேர்ட் வாங்கிக்கொடுக்கிறார்கள். அதில் அனைத்தும் இருக்கின்றன. குழந்தைகளுக்கு அது கையில் இருந்தால்போதும் பசியும் மறந்துபோகிறது.

உணவுவேளையில் மேசையில் உணவை பரிமாறிவிட்டு, தங்கள் குழந்தைகளை ஆசனத்தில் அமர்த்தி, அவர்களின் முன்னால் ஒரு ஐபேர்டையும் நிறுத்திவைத்துவிடும் தாய்மாரை வெளிநாடுகளில் காண்கின்றேன்.

ஐபேர்டில் மூழ்கியிருந்தவாறு உணவை உட்கொள்கிறார்கள். தாய்மார், தங்கள் கைத்தொலைபேசியில் முகநூல் பார்த்துக்கொண்டும், வாட்ஸ் அப்பில் தகவல் பரிமாறிக்கொண்டுமிருக்கிறார்கள்.

அன்று குழந்தைகளுக்கு உணவூட்டும்போது கையில் அவர்களை தூக்கிவைத்துக்கொண்டு நிலவையும், கோழி பறவைகளையும் காண்பித்து கதைகள் சொன்னோம். ஆனால், இன்று அந்தக்கதைகள் யாவும் வண்ண வண்ண காட்சிகளில் ஐபேர்டுக்குள் வந்துவிட்டன.

குழந்தையை தூக்கிச்சுமக்கும் வேலையும் இல்லாமல்போய்விட்டது.

ஒரு காலகட்டத்தில் படிக்கும் குழந்தைகளை இரவில் உறங்கவைப்பதற்கு முன்னர் பாட்டிமார் கதை சொன்னார்கள். தாய்மார் குழந்தை இலக்கிய நூல்களை எடுத்து, அதிலிருக்கும் படமும் கதையும் காண்பித்து சொல்லிக்கொடுத்தார்கள்.

இதனை ஆங்கிலத்தில் Bedtime Stories எனச்சொல்வார்கள். இந்தப்பண்பாடு சமகாலத்தில் படிப்படியாக மறைந்துவருகிறது. குழந்தைகள் அத்தகைய கதைகளை படுக்கையில் இருந்தவறே ஐபேர்டில் பார்த்து பரவசமடைகின்றன.

பாட்டிமாருக்கும் பெற்றோருக்கும் கதை சொல்லும் வேலையும் இல்லாமல்போய்விட்டது. ஒரு தேசத்தில் பொருளாதார நெருக்கடி தோன்றும் சந்தர்ப்பங்களில் வேலைவாய்ப்புகளை மக்கள் இழப்பார்கள். அதுபோன்று சமகால குடும்பங்களில் வசதி வாய்ப்புகள் பெருகும்போது, பெரியவர்களுக்கும் சில வேலைகள் இல்லாமல்போய்விடுகின்றன. குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்குமிடையில் அந்நியத்தன்மை தோன்றிவிடுகிறது.

தொடர்ச்சியாக ஐபேர்ட் பார்க்கும் குழந்தைகளுக்கு ஐம்புலன்களிலும் படிப்படியாக பாதிப்பு தோன்றுகிறது என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபித்துள்ளனர். ஆனால், யார்தான் இதுபற்றி சிந்தித்து செயல்படுகிறார்கள்?

இது இவ்விதமிருக்க, நான் சிறுவனாக இருக்கும்போது, எனது பாட்டி எனக்கு பல கதைகளை சொல்லித்தந்தார்கள். அந்தக்கதைகளை எனது குழந்தைகளுக்கும் சொல்லிக்கொடுத்தேன். எனது மகன், தான் படித்த பாடசாலையில் சில கதைகளை எழுதிக்காண்பித்து ஆசிரியரிடம் பாராட்டுப்பெற்றான்.

அதில் பாட்டி வடை சுட்ட கதையும் ஒன்று. நிலவைக்காண்பித்து " நிலா நிலா ஓடிவா பாடலைப்பாடியபோது, அந்த நிலவிலே மெக்டொனல்ட்ஸ் இருக்குமா? எனவும் கேட்டிருக்கின்றான். அப்போது எங்கள் பாட்டி எனக்கு, நிலவில் இருக்கும் பாட்டி வடை சுட்டகதை சொன்னதையும் அவனுக்குச் சொல்லியிருக்கின்றேன். இதெல்லாம் 25 வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம்.

# விளையாட்டு

## மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் நீண்ட காலம் பங்களித்த பிறிற்ரோ ஹென்றிக்



மட்டக்களப்பின் கால்பந்தாட்டத் துறைக்கு பங்களிப்பு வழங்கிய கழகங்களுள் B.R.C கழகம் குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது. இக்கழகம் மட்டக்களப்பின் பறங்கியர் சமூகத்தவரைப் பிரதிநிதித்துவப்படுத்திய கழகமாக விளங்கியுள்ளது. இக்கழகத்தினூடாக மிகவும் திறமையான வீரர்கள் உருவாகி மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணியில் விளையாடியுள்ளனர். இவர்கள் மட்டு நகரின் கால்பந்தாட்டத்தை பிரகாசிக்கச் செய்தார்கள்.

இவ்வாறு வீ.ஆர்.சி ஊடாக உருவாகி



மட்டக்களப்பின் கால்பந்தாட்டத் துறையில் பிரகாசித்த ஒரு புகழ் பெற்ற வீரராக திரு பிறிற்றோ ஹென்றிக் திகழ்ந்தார். 1970,80 களில் மட்டக்களப்பிற்குப் புகழ் சேர்த்த மாவட்ட கால்பந்தாட்ட அணியில் இவர் களமாடியுள்ளார். பிறிற்றோ ஹென்றிக் அவர்களை ஒரு சிறந்த கனவான் வீரராக கூறுகிறார் அவருடன் களமாடிய சவரிமுத்து மகேசன்.

1980 களின் பின்னர் வீ.ஆர்.சி கழகம் செயலிழந்ததன் பின்னர் பிறிற்றோ ஹென்றிக் அவர்கள் கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்ந்து விடவில்லை மாறாக, தான் வாழ்ந்த கல்லடி டச்பார் எனும் ஊரினை மையப்படுத்தி புனித இக்னேசியஸ் விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் ஒரு கால்பந்தாட்டக் கழகம் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் பிரதானம் பெறுவதற்காகத் தனது பங்களிப்பை வழங்கினார்.

தான் முதுமையுற்ற போதிலும் புனித இக்னேசியஸ் கழகத்திற்காக களமாடினார். இவரைப் பின்பற்றி டச்பாரில் பல கால்பந்தாட்ட வீரர்கள் உருவாகினார்கள். டச்பாரிலிருந்து கால்பந்தாட்டத்தில் ஜொலித்த முன்னணி வீரர்களைப் பயிற்றுவிப்பதில் திரு. பிறிற்றோ ஹென்றிக் அவர்கள் அதிகம் தாக்கஞ் செலுத்தியுள்ளார். இவருடைய புதல்வர்களும் முன்னணி கால்பந்து வீரர்களாக ஜொலித்தார்கள். குறிப்பாக மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தில் 1990 களில் பிரகாசித்த ஹெசியஸ் ஹென்றிக் அவர்கள் இவருடைய மூத்த மகன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் பிறிற்றோ ஹென்றிக் அவர்கள் 1990 களில் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் ஒரு சிறந்த மத்தியஸ்தராகக் கடமையாற்றி சிறப்பான கால்பந்தாட்டம் விருத்தி பெறுவதற்குத் தனது பங்களிப்பினை வழங்கியவர்.

இக்காலத்தில் கால்பந்தாட்டத்திற்குரிய மத்தியஸ்தர்கள் மட்டுநகரில் பற்றாக்குறையாகக் காணப்பட்ட நிலையில் பிறிற்றோ ஹென்றிக் அவர்கள் கால்பந்தாட்டம் மீது தனக்கிருந்த அதீத அக்கறை காரணமாக பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து மத்தியஸ்தர் கடமையினை சிறப்பாக வழங்கியிருந்தார். மிகவும் இறுக்கமான கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு பிறிற்றோ ஹென்றிக் அவர்களே பிரதம மத்தியஸ்தராக ஏகமனதாக தெரிவாகியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

அந்தளவிற்கு இவருடைய மத்தியஸ்தம் எல்லோராலும் ஏற்கப்படுவதாகவே இருந்துள்ளது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## தைப்பொங்கல்தின கடற்கரை கரப்பந்தாட்ட பரிசளிப்புவிழா!





தைப்பொங்கல்விழாவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக்கழகம் கடந்த 4 தினங்களாக நடாத்திவந்த கடற்கரை கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்புவிழாவும் நேற்று பொங்கல்தினமான (15) செவ்வாய்க்கிழமை கழகத் தலைவர் லோ.சுரேஸ் தலைமையில் கடற்கரையில் நடைபெற்றபோது இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற அணிவீரர்களுக்கு கழகப்போசகர்கள், மாவட்டவிளையாட்டு அதிகாரி நபார் ஆகியோர் வெற்றிக்கிண்ணங்களை வழங்குவதைக்காணலாம்.

படங்கள் காரைதீவு குறூப் நிருபர் சகா

## தேசிய மட்டத்தில் சாதித்தவர்களுக்கான கௌரவிப்பு



2018 ஆம் ஆண்டு தேசியமட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு திருகோணமலை கடற்படை உள்ளக அரங்கில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கல்வி விளையாட்டமைச்சின் செயலாளர் தலைமையில் மாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் ஜனாப் எம் என் நௌபீஸ் அவர்களின் ஒழுங்கமைப்பில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.




இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்காக கூடைப்பந்து ஆண், கடற்கரை கபடி ஆண், பெண் மற்றும் மல்யுத்தம் போன்ற போட்டிகளுக்ககவும் மற்றும் 2018 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் திறமைகாட்டியதற்காக திமோத்தி நிதுஷன் அவர்களும் பயிற்றுநர்கள் திரு. ரி. பிரசாத்,



ரி.மதன், ரி.மதன்சிங், எஸ். திருச்செல்வம் ஆகியோரும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.வே.ஈஸ்பரனும் கௌரவிக்கப்பட்டனர்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 19

## இலங்கை அதிபர் சேவை தரம் III போட்டிப் பரீட்சை

- மட்டுநகர் யுவன் -

### கிரகித்தல்

• பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்குக.

1. “தேசிய வாழ்க்கை எனும் ஆடையில், போர்த்துக்கேயர் தமது கலாசாரம் என்னும் நூல்களைப் பின்னுவதற்குக் கைக்கொண்ட பிரதான வழிகளுள் ஒன்று மதம் ஆகும். அவர்களது அயராத உழைப்பின் பலனாக அதுவரை புத்த மதத்தைப் பின்பற்றிய சிங்கள மக்களும் இந்து மதத்தைப் பின்பற்றிய தமிழ் மக்களும் தமக்கெனத் தனியான தகவுகளையும் வழக்கங்களையும் மேற்கொண்டு புறம்பானதொரு சமுதாயமாக வாழத்தலைப்பட்டனர். பாரம்பரியமான பௌத்தர்களையும் இந்துக்களையும்விடத் தாம் ஒரு புறம்பான கலாசாரக் கூட்டத்தினர் என்று அவர்கள் தம்மைப்பற்றி எண்ணிக்கொண்டனர். அவர்களது வாழ்க்கை முறை, பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து வந்த மக்களின் வாழ்க்கை முறையிலும் வேறுபட்டதாயிற்று. ஆகவே உணவு, உடை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றிலெல்லாம் இருசாராருக்குமிடையே வேறுபாடு காணப்பட்டதில் வியப்பில்லை. இந்தப் புதிய வாழ்க்கை முறை காலக்கிரமத்தில் ஒரு தேசிய நிலையைப் பெற்று, இப்பொழுது இலங்கை மக்கள் எல்லோரினதும் அன்றாட வாழ்க்கையிற் பிரிக்கமுடியாமற் பின்னப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.”

(i) இங்கு குறிப்பிடப்படும் இருசாராரும் யாவர்?

(ii) போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கைச் சமூகநிலைபற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார்?

(iii) போர்த்துக்கேயர் தமது இலக்கை அடைந்தமையை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்?

(iv) போர்த்துக்கேயரின் நோக்கம் யாது?

(v) “தேசிய வாழ்க்கை எனும் ஆடையில், போர்த்துக்கேயர் தமது கலாசாரம் என்னும் நூல்களைப் பின்னினர்” என்பதிலிருந்து போர்த்துக்கேயர் பற்றிய உமது மனப்பதிவு யாது?

2. “ஒரு சிறந்த கருத்துடைக் கல்விமுறையை உருவாக்கியமைப்பதானால், தனிமனிதனின் உலகியல் தேவைகளையும் நாட்டின் சமூக பொருளாதாரத் தேவைகளையும் மட்டுமன்றி, ஒவ்வொருவரினதும் உள்ளத்தை உயர்த்துவதற்கு உவந்த ஆன்மிகச் சூழ்நிலையை உருவாக்கித் தருதலும் ஒருதலையாய் வேண்டற்பாலது என்பது எனது உறுதியான நம்பிக்கை. செப்பமாகக் கருக்கொண்ட கல்விமுறையானால் அது தனிமனிதன் எவ்வித முற்கோட்முமின்றி, தன்னையும் சமூகத்தையும் விளக்கி, வளரத்தக்க வகையில் அவனிடம் அகக்கட்டொழுங்கை வளர்ப்பதாக மட்டுமன்றி, “யாதுமூரே யாவருங் கேளிர்” என்ற கோட்பாட்டிலும் அவனுக்கு அசைக்கொணா நம்பிக்கையூட்டுவதாயும் இருத்தல் வேண்டும். தனிமனிதருக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் காழ்ப்பையும் பிணக்கையும் பூசலையும் உண்டாக்கும் அக மயக்கத்திலின்றும் மனிதன் விடுதலை பெறுமப்போதே, சமூகத்தில் உண்மையான இசைவமைதி நிலவும்.”

(i) ‘உறுதியான நம்பிக்கை’ என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது என்ன?

(ii) ‘அக மயக்கம்’ என்பதற்குள் அடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் யாவை?

(iii) எத்தகைய கல்விமுறையை ஆசிரியர் எதிர்பார்க்கிறார்?

(iv) ‘மனித விடுதலை’ எதில் தங்கியுள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

(v) பரந்த உலக மனப்பான்மையை எடுத்துக்காட்டும் தொடர் எது?

• உரைப்பகுதியுடன் பொருந்துகின்ற மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்க.

(அ) கல்வித்துறையில், முதலில் வந்திறங்கிய பிரான்சிசுக்கன் சபையார் சிறிது காலம் அதன் தனியுரிமையை ஏற்றிருந்தனர். ஆனால் சமகாலத்தில் ஐரோப்பாவிலே கல்வி புகட்டுவதிற் புகழ்நாட்டிய இயேசுசபையார் இத்துறையில் இறங்கி, இத்தனியுரிமையைத் தகர்த்தும் அவர்களைத் தொடர்ந்து விரைவிலே தொமினிக்கன் சபையாரும் அகுஸ்தீன் சபையாரும் இங்கு வந்தனர். அவர்கள் பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் தொடங்கினர். இவ்வாறே ஒவ்வொரு சபையினரும் தத்தமக்கென ஒவ்வோர் ஆதிக்க மண்டலத்தை வகுத்துக்கொண்டு, அங்கே தம் தலைமையை நிலைநாட்ட முயன்றனர். ஆனால் இப்படி எல்லை வகுப்பது எப்போதும் சாத்தியப்படவில்லை.

(i) இங்கு குறிப்பிடப்படும் சபையினர் பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் தொடங்கினர்.

(ii) கல்வியில் ஏகபோக நிலையை இல்லாமற்செய்யும் செயற்பாடு இடம்பெறவில்லை.

(iii) இச்சபையினர் அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் அக்கறைகொள்ளவில்லை.

(iv) எல்லை வகுப்பது என்பதில் இச்சபையினர் அக்கறை கொண்டிருந்தனர்.

# கற்போம்

## உயிரியல் அறிமுகம் 01 தொடர்ச்சி...

குணம் சவரிராஜா

### உயிரியல் சார்பான பிரச்சினைகள்

**உயிருலகின் தன்மையும் ஒழுங்கமைப்பு வடிவங்களும்**

8. உயிர் அங்கிகளிடையே காணப்படும் பல்வகைமையை வகைப்படுத்தக்கூடிய நான்கு அடிப்படை அம்சங்களைத் தருக.
   - பருமன்
   - உருவம்
   - வடிவம்
   - வாழிடம்

9. அங்கிகளின் முக்கிய சிறப்பம்சங்கள் ஏழினைக் கூறுக.
   i. ஒழுங்கும் ஒழுங்கமைப்பும்
   ii. அனுசேபம்
   iii. வளர்ச்சியும் விருத்தியும்
   iv. உறுத்துணர்ச்சியும் இயைபாக்கமும்
   v. இசைவாக்கம்
   vi. இனப்பெருக்கம்.
   vii. பாரம்பரியமும் கூர்ப்பும்

10. உயிர்ப் பொருள்களின் ஆட்சிநிரை ஒழுங்கமைப்பு மட்டங்களைக் குறிப்பிடுக.
    மூலக்கூறுகள், புன்னங்கங்கள், கலங்கள், இழையங்கள், அங்கங்கள், அங்கத் தொகுதிகள், அங்கிகள், குடித்தொகைகள், சாகியங்கள், சூழற்றொகுதிகள், உயிர்க்கோளம்.

## உயிரின் இரசாயன கல அடிப்படை – 02

### உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

11. புவியோட்டில் இயற்கையாகக் காணப்படும் 92 மூலகங்களுள் எத்தனை மூலகங்கள் மனிதருக்கும் தாவரங்களுக்கும் அவசியமானவை?
    - இவற்றுள் ஏறத்தாழ 20-25% மூலகங்கள் ஆரோக்கியமான வாழ்க்கைக்கும் இனப்பெருக்கத்துக்கும் அவசியமானவையாகும்.
    - ஏறத்தாழ 25 மூலகங்கள் மனிதருக்கும் ஏறத்தாழ 17 தாவரங்களுக்கும் அவசியமானவை.

12. உயிர்ப்பொருளின் அத்தியாவசியமான மூலகங்களில் ஏறத்தாழ 96% ஐ ஆக்கும் நான்கு மூலகங்கள் யாவை?
    - ஒட்சிசன் (O),
    - காபன் (C),
    - ஐதரசன் (H)˙
    - நைதரசன் (N)

13. உயிரங்கிகளின் திணிவில் எஞ்சியுள்ள 4% இன் பெரும் பகுதியை ஆக்கும் நான்கு மூலகங்களைக் குறிப்பிடுக.
    - கல்சியம் (Ca)
    - பொஸ்போரஸ் (P)
    - பொற்றாசியம் (K);
    - கந்தகம் (S)

14. மனிதரில் C. H. O. N ஆகியன உடற் திணிவின் 96.3% ஐ ஆக்குகின்றன. எஞ்சியுள்ள 3.7% ஐயும் ஆக்கும் மூலகங்கள் யாவை?
    Ca, P, K, S, Na, Cl, Mg - அத்தியாவசிய மூலகங்கள்
    B (போரன்), Co (கோபால்ற்), Cu (செம்பு), Cr (குரோமியம்), F (புளோரின்), I (அயடின்), Mo (மொலிப்டினம்), Mn (மங்கனீசு), Se (செலனியம்), Si (சிலிக்கா) Sn (தகரம்), V (வனடியம்) மற்றும் Zn (நாகம்). - சுவட்டு மூலகங்கள்

15. ”நீர் இன்றியமையாத ஒரு அசேதன மூலக்கூறாகும். நீரின்றி இக்கோளின் மேல் உயிர் வாழ்க்கை நிலைத்திருக்க முடியாது.” உயிர் வாழ்க்கையில் நீர் முக்கியத்துவம் பெறும் இரண்டு காரணங்கள் யாவை?
    1. நீர் உயிருள்ள கலத்தின் இன்றியமையாத இரசாயனக் கூறாக இருக்கின்றமை.
    2. எல்லா அங்கிகளுக்கும் ஓர் உயிரியலுக்குரிய ஊடகத்தை வழங்குகின்றமை.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---


# மட்டக்களப்பில் வாழும் தமிழ் பேசும் பூர்வீக குடிகளிடம் இன்றும் காணப்படும் சில புராதன வழிபாட்டு முறைகள்

தேன் எடுக்கும் சடங்கு

------------------------------------------

தென் எடுக்கும் சடங்கு இடத்துக்கு இடம் சிறிது வேறுபடினும் சாராம்சம் ஒன்றுதான்,தேன் தேடிசெல்லல், தேன் எடுத்தல், பூச்சிகுத்தி வீழ்தல் என்பனவே இதில் இடம் பெறும். இதற்காகப்போடப்படும் மேடைகளின் தன்மைகளும் இடத்துக்கிடம் வேறுபடுமாயினும் அனைத்தினுள்ளும் ஓர் ஒற்றுமை இழையோடும்

(தேன் எடுக்கும் சடங்கு நடைபெற அமைக்கப்படும் பந்தல் இது)



வரைபடம் – 1

இலக்க விளக்கங்கள்

1.அலங்காரம் செய்யப்பட்ட இடப்பக்கப் பந்தற் கால்

2,மாறா தெய்வம் ஏறிச் செல்லும் ஏணி.

3.இடது பக்கச் சாதாரண பந்தற் கால். 4.அலங்காரம் செய்யப்பட்ட வலப் பக்கப் பந்தற் கால்.

5.பூசகர் ஏறிச்செல்லும் ஏணி

6. வலது பக்கச் சாதாரணப் பந்தற்கால். 7. முதலாம் கும்பா குடம்.

8. இரண்டாம் கும்பா குடம்.9. மூன்றாம் கும்பா குடம்.10. மாறாத் தெய்வம் கப்புகன் தலையில் பூச்சிகொட்டிவிளையாடும் மேடை. 11. படுகிடை மாறா நிற்குமிடம்.

தேன் எடுக்கச் சென்றவர் பூச்சியுடன் திரும்பி வந்து பெட்டியையும், கோடாரியையும் மடை யில் வைப்பார். பூசை முடிந்தவுடன் அம்மாறாத் தெய்வம் கப்புகனில் முற்பட்டு முன்றிலில் போடப்பட்ட தோரணத்தில் ஒரு தடவை ஏறி இறங்கும். பின்னர் இன்னொரு கப்புகன் பூச்சி பெட்டியுடனும், கோடாரியுடனும் மற்றொரு பக்கமாக தோரணத்தில் ஏறி உச்சத்திற்குச் செல்வார். மாறாத் தெய்வமும் மறுபக்கமாக ஏறிச் செல்லும், தெய்வம் ஏறும் வழியால் பூசகர் ஏறக்கூடாது என்பது விதி. அதில் ஏறிய தெய்வம் கப்புகனிடம் பெட்டியை வாங்கி அதனுள் இருந்த பூச்சியை தன் தலையிலும், கப்புகன் தலையிலும் கொட்டி விளையாடி விட்டு உச்சியில் அமைக்கப்பட்டிருந்த மூன்று கும்பா குடங்களையும் கோடாரியால் கொத்திக் கீழே வீழ்த்தும். மாறா தெய்வம் பந்தலின் உச்சியிலிருந்து கீழே இறங்கி வந்ததும், கீழே ஏற்கனவே நின்று கொண்டிருந்த படுகிடை மாறா என்னும் தெய்வம் தென்னம் பாளையின் பூக்களை அள்ளி இதன்மேல் எறியும். எறிய, மாறாதெய்வம் பூச்சி குத்தியது போல பாவனை செய்த வண்ணம் தலைக் கட்டாடியின் காலில் விழும். தலைக் கட்டாடி பூச்சிக் கடியின் அகோரம் தணிப்பார்.

உணர்வு அற்ற நிலையில் கிடக்கும் மாறாத் தெய்வம் பிடித்தவரைத் தூக்கிச் சென்று குமார கோயிலின் படியிற் கிடத்துவர். பின்னர் இவர் தானாக உணர்வு பெற்று எழுந்து செல்வர்.

இங்கே வேடர்கள் தேன் எடுப்பதும் அவர்கட்குப் பூச்சி குத்துவதும், அபிநயித்துக் காட்டப்படுவதனை அவதானிக்கலாம். பூச்சி குத்தியது போல அபிநயித்து அதிலிருந்து தப்புதலின் மூலம் பூச்சி குத்தாது என அவர்கள் எண்ணி இத்தகையதொரு ஆட்டம் ஆடியிருக்கலாம். புராதன காலத்தில் ஆடப்பட்ட இவ்வாட்டம் அவ்வமைப்புச் சிதைந்த பிறகும்கூட பாரம்பரியம் பேணும் எண்ணத்தில் ஈண்டு மீண்டும் நாடகத் தன்மையுடன் நிகழ்த்தப்படுவதை அவதானிக்கலாம்

ஆனைகட்டும்.சடங்கு

----------------------------------------------------

இறுதிச் சடங்கில் நாடகத் தன்மையுடன் நடக்கும் இன்னொரு சடங்கு ஆனைகட்டும் சடங்காகும். மூன்றாம் கட்டாடி மீது பணிக்க மாறா என்ற தெய்வம் பிரசன்னமாகும். பணிக்கர் என்று ஆனை கட்டுபவரைக் குறிப்பர்.

மட்டக்களப்பில் வட பகுதியில் பணிக்கனைப் பெத்த மலை என்ற மலை ஒன்றும் உண்டு. பணிக்கமாறாவின் தொழில் ஆனைகட்டுவதாகும். ஆனைகட்டுவதற்கென ஒரு ஆனையும் (களி மண்ணால் செய்யப்பட்டது) சிறாம்பியும் இருக்கும்.

ஒரு பணிக்கன் (தெய்வம் ஆடுபவர்) வந்து யானையைக் கட்டுவான். இன்னொரு பணிக்கன் (ஆடுபவன்) வந்து யானையை எய்வான். பணிக்கமாறா கட்டும் யானையை இவர்கள் எய்யமாட்டார்கள். அப்போது அலியன் யானைக் குட்டி யானையைக் கட்டவிடாது.

கட்ட வந்த சன்னதக்காரன் அலியன் யானையைக் கண்டதுபோல அதிசயித்து அங்கும் இங்கும் மாறி மாறிப் பார்த்து விட்டு மறைந்து விடுவான். மறைந்த பின் எய்கிற பணிக்கன் வருவான். அவன் அலியன் யானையை எய்து கொன்று விடுவான். அவன் கொன்றதும் பணிக்கமாறாத் தெய்வம் வந்து யானைக் குட்டியைக் கட்டிக்கொண்டு பறை தட்டிக்கொண்டு ஆனைக்குத் தீனி, தண்ணீர் எல்லாம் கொடுத்து அவ்யானை, குமாரருக்கு என்று கூட்டிச் செல்வான். இந்நிகழ்ச்சி யானை பிடித்தலோடு சம்பந்தமுடைய சடங்கின் நினைவுச் சின்னமாகும். அலியன் யானையைக் கொல்வது போலப் பாவனை செய்வது அலியன் யானையைக் கொன்று குட்டியை பிடிப்பதே யாம். ஒரு காலத்தில் வாழ்க்கையுடன் பிணைந்திருந்த சடங்கு பின்னர் நிகழ்த்தப்படும் சடங்காகி விடுகிறது

கரடித் தெய்வம்

இதன்பின்னர் கரடித் தெய்வம் வரும். இது வன்னித் தெய்வம் எனப்படும். கட்டை ஒன்று நாட்டி கரடி போல வைத்திருப்பர். கரடித் தெய்வம் அதற்குமேல் ஏறி விளையாடி அதனைப் பிரித்து எறிந்து விட்டுச் செல்லும். இதேபோல ஒரு தெய்வம் சிங்களவர் மத்தியில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தெய்வங்களோடு கடற்பகுதி, கப்பற் தெய்வம் ஆகியன வரும். இவற்றோடு ஆச்சா தெய்வம், ஆக்கா தெய்வம் முதலிய சிங்களத் தெய்வங்களும் வரும். வானத்தில் இருள் இருப்பின் . இவற்றை அழைத்து மழை பெய்ய செய்யும்படி வேண்டினால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை உண்டு பின்னர் அம்மன் கலை வரும். வைசூரி அம்மன், மணல்வாரி அம்மன், அம்மாள், சின்னமுத்து முதலிய அம்மன்கள் வந்ததும் அவர்களை வழிபாடு பண்ணிப் பஞ்சாமிர்தம் கரைத்து வைத்துச் சாந்தி பண்ணுவர்.

புள்ளிக்காரத் தெய்வம்

------------------------------------------------

புள்ளிக்காரத் தெய்வம் மிகவும் பயங்கரமான தெய்வமாகும்.

கோயிலுக்குள் திரைச் சீலை கட்டி, திரைக்குள் வைத்து கறுப்பு, மஞ்சள், வெள்ளைப் புள்ளிகளை இத்தெய்வம் ஏறி ஆடுபவர் மீது குத்துவார்கள். ஒவ்வொரு புள்ளியும் ஒவ்வொரு கண் மாதிரி இருக்கும். புள்ளி குத்துவதற்கென மை செய்து எடுப்பார்கள். பின்னர் புள்ளிக்காரனுக்குத் தலைப்பாகை கட்டி அவனுக்குரிய சட்டையும் போடுவர். பிள்ளைகள் கண்டு பயந்து விடும், என்று இப்போது புள்ளிகாரத் தெய்வத்திற்கு அப்படிச் செய்வதில்லையாம். நோய்களைத் தரும் தெய்வத்தை உருவகித்ததன் விளைவே புள்ளிக்காரன் தெய்வம் போலும்.

கன்னிமார் சடங்கிற்கு குருனாகலை தெவுத்தன், மாத்தளை தெவுத்தன் ஆகியோர் பூக்குடலை கொண்டு வருவார்கள், எனவும், அவர்கட்கும், பூக்குடலைக்கும் காவலாய் வருபவனே புள்ளிக்காரன் என்ற நம்பிக்கையும் இவர்களிடமுண்டு.

இத்தெய்வங்களுக்கு விசேட உடுப்புகள் உண்டு. ஒவ்வொரு முகூர்த்தத்திற்கும் ஒவ்வொரு உடுப்புடன் தான் தெய்வம் ஆட வேண் டும். குமார தெய்வம் கச்சணிந்து ஆடும். (கச்சு அணிந்து) அதாவது இருபது முழம் வெள்ளைச் சீலையைக் கயிறு போட்டுச் சிங்களத் தட்டுடுப்பு உடுத்துவது போல இடுப்பில் வளைந்து கட்டி அதற்கு மேற் சிவப்புச் சட்டை போடுவர். மேலுக்கு கோட்டும் போடுவர்.' கரடித் தெய்வம் பெண் தெய்வம் போல உடுக்க வேண்டும். ஆண் தெய்வங்களுக்கெல்லாம் குருத்து ஒலையினால் சட்டை மாதிரிச் செய்து மேலே போடப்படும். தலையில் தலைப்பாகையுடன் கையில் வில்லம்புகளுடனும் இவை விளையாடும்.

வேட வெள்ளாளரிடமெல்லாம் நடைபெறும் இச்சடங்கு முறைகள் அவர்களின் முன்னோர்களின் புராதன வாழ்க்கை முறையின் நினைவு களாகும். பூச்சி பிடித்தல், தேனி கொட்டல், யானை




பிடித்தல் ஆகிய சடங்கு முறைகளில் அவர்களின் தொழில் சார்ந்த கிரியைகளையும், ஏனையவற்றில் நோய்தீர்க்க ஏனைய தெய்வங்களை வேண்டும் கிரியை களையும் காணுகிறோம். உணவு தேடுதலும்,இனம் பெருக்கலுமே பண்டைய மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்பதற்கு இவை உதாரணமாகத் திகழ்கின்றன.

உணவு தேடும்பொழுது, தொழில் செய்யும்போது செய்த செயல்களைத் திருப்பிச் செய்தல் மூலம் தமக்கு இன்னும் இன்னும் உணவு கிடைக்கும் என்றெண்ணியே ஆரம்பத்தில் இக்கிரியைகள் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

பின்னால் அவர்களின் உணவு தேடும் பொருளாதார அமைப்பு மாறிப் புதிய பொருளாதார அமைப்புக்குள் வேடர் வந்ததும் நம்பிக்கை காரணமாகத் தமது பழைய இன நினைவுகளைச் சடங்குகளாகச் செய்வதை காண்கிறோம். அப்படிச் செய்யும்போது பார்ப்போர், நடிப்போர் என்று இருபிரிவினராக அம்மக்கள் மாறி விடுவதனைக் காணமுடிகிறது. குமார கோயிலே நடிப்பதற்குரிய களமாகவும் மாறி விடுகிறது.

வேடமிடுதல், ஆடுதல், பார்வையாளர் பங்கு கொள்ளுதல், ஒன்றைப் போலச் செய்தல் ஆகிய நாடக அமிசங்கள் மேற்கூறிய சடங்குகளில் நிறையக் காணப்படுகின்றன. எனினும் இவற்றை நாம் நாடகம் என்று கொள்ள முடியாது. நாடகமும், சடங்கும் அருகருகே இருப்பதனையே இங்கு காண்கிறோம். இச்சடங்குகள் நாடகமாக முகிழ்க்க முடியவில்லை. காரணம் மட்டக்களப்புச் சமூக அமைப்பின் அடிநிலையிலுள்ள இவ்வேடவேளாளரின் வழிபாடு அனைவரையும் இணைக்கும் சமயமாக முடியவில்லை. எனவே இவை தம்மளவில் இன்றும் நாடகத் தன்மையுடைய கரணங்களாகவே இருக்கின்றன.

இது ஆகமம் சாரா வழிபாட்டுமுறைகளின் ஒரு முகமானால் கும்பம்,சூலம் முகக்களை சில இடங்களில் உருவம் வைத்து வழிபடுதல் இன்னொரு வழிபாட்டு முறையாகும்,இதனைச் செய்பவர்கள் பூர்வீக குடிகள் அல்ல இவர்களிலும் சற்று வளர்ச்சி பெற்ற கிராமது மக்கள்,இதனையே கிராமியத் தெய்வ வணக்கம் என்பர்.அதனை அடுத்துப்பார்ப்போம்

( தொடரும்)

தொடர்ச்சி...

## மல்லிகைத்தீவு மக்களின் உயிருக்கு உலைவைக்கும் பேராபத்து!

கடந்தாண்டு ரி. சின்னத்துரை(வயது 54), கே.சுப்பிரமணியம்(வயது 67) ஆகிய இருவர் இந்நோயினால் மரணித்துள்ளனர்.

தற்போது பதின்மருக்கும் மேற்பட்டோர் குறிப்பாக குடும்பஸ்தர்கள் மாதாந்தம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அவர்களில் எஸ்.தெய்வேந்திரன்(வயது40), எஸ்.புவனேஸ்வரி(வயது 64), ரி.புஸ்பராணி(வயது 60), என். நல்லதம்பி(வயது 68), இ.கவிதா(வயது 38), ஏ.காராளசிங்கம்(வயது60) ஆகியோர் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப்பேராபத்தை தடுக்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்த கிராமமக்கள் மன்றாட்டமாகக் கேட்டுள்ளனர்.



அந்த மக்கள் பயப் பீதியுடன் வாழ்ந்துவருகின்றனர். சிலர் இடம்பெயரத் தலைப்பட்டுள்ளனர்.

நேற்று அந்த மக்கள் சம்மாந்துறைப் பிரதேசசபையின் உபதவிசாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான வெ.ஜெயச்சந்திரனைச் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பேராபத்து பற்றி விளக்கிக் கூறியுள்ளனர்.

அவர் கூறுகையில், தான் அம்பாறை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளருக்கு எழுத்து மூலம் பிரச்சினையைச் சமர்ப்பித்ததாகவும் சுகாதாரவைத்திய அதிகாரியிடமும் தெரிவித்ததாகவும் மேலும் தமது சபையினால் வாரத்திற்கொருமுறை வவுசரில் குடி தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் விரைந்து நடவடிக்கை எடுத்தால் மல்லிகைத்தீவு மயான பூமியாவதிலிருந்து தவிர்க்கலாம் என்று கூறப்படுகிறது.

சுற்றவரவிருக்கும் வயல் பகுதிகளில் உரமாகவும் பூச்சி கொல்லியாகவும் பயன்படுத்தப்படும் இராசயனப் பொருட்கள் குடிநீரில் பரவியமையே சிறுநீரகக்கோளாறுக்கு காரணம் என்று மருத்துவர்கள் கூறியதாக ஊர்மக்கள் கூறியுள்ளனர்.

இவை குறித்த பூரணமான புலன் விசாரணையும் தேவைப்படுகின்றது.

தொடர்ச்சி...

## போருக்குப்பின்னரான இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர்வாழ் மக்களின் பங்களிப்பு குறித்த கலந்துரையாடல்

தொனிப் பொருளிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் வாழ்கின்ற இலங்கை தமிழர் அமைப்பு அறிவித்துள்ளது.
இக் கலந்துரையாடலில் சிவில் அமைப்புக்கள், மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் லண்டனில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர் அமைப்பின் செயலர் ராஜசிங்கம் ஜெயதேவன், அதன் தலைவரான விஸ்வலிங்கம் சிவலிங்கம் ஆகியோர் லண்டனில் இருந்து வருகை தந்து கலந்து கொள்கின்றனர்.

இவ்வமைப்பின் உதவித் திட்டங்கள் தொடர்பாக மக்களின் கருத்துக்கள் அறிந்து கொள்ளப்படுடன் மேலும் எவ்வாறான உதவித்திட்டங்களை எதிர்பார்க்கின்றனர் என்பது தொடர்பாகவும் கருத்துக்களை அறிந்து கொள்ளவுள்ளதாகவும் அமைப்பின் செயலாளர் ராஜசிங்கம் ஜெயதேவன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி...

## துறைமுக நகருக்காக கடலை நிரப்பும் பணிகள் முடிந்தன



சீனத் தூதுவர் Cheng Xueyunan உரையாற்றுகையில் துறைமுக நகரின் எதிர்கால அபிவிருத்திகளை விரைவாக மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

துறைமுக நகரத்திற்காக கடலை நிரப்பும் நடவடிக்கையின் காரணமாக, சில பிரதேசங்களில் கடற்கரைகள் அரிப்புக்குள்ளாவதாக சிலரால் முறைபாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக



அமைச்சர் பாட்டலி சம்பிக்க இதன் போது தெரிவித்துள்ளார். துறைமுக நகரத்தின் நிர்மாணப்பணிகளை முன்னெடுத்துவரும் சீன நிறுவனத்தின் ஊடாக குறித்த பகுதிகளை புனரமைக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.


தொடர்ச்சி...

## நிலவில் வளர்ந்த தாவரம்

### வரலாற்றில் முதல் முறையாக நிலவில் ஒரு தாவரம் முளைத்துள்ளது.

தங்களுக்கான பயிர்களை எதிர்காலத்தில் விண்வெளி வீரர்கள் வளர்ப்பதில், சமாளிக்க முடியாத பிரச்சினைகள் எதுவும் இருக்காது என்பதை இது காட்டுகிறது" என்று அவர் கூறினார்.

``விண்வெளிப் பயணங்களில் நின்று செல்லும் இடமாக நிலவை



பயன்படுத்துவதில், குறிப்பாக செவ்வாய் கிரகதத்துக்கான பயணங்களில் இவ்வாறு பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் ஏற்படும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், ஒப்பீட்டளவில் இது பூமிக்கு நெருக்கமாக உள்ளது" என்று வாட்சன் தெரிவித்தார். ``எதிர்காலத்தில் விண்வெளியில் மனிதர்கள் உயிர்வாழ்வது பற்றிய சிந்தனைகளை நாங்கள் உருவாக்கியுள்ளோம்'' என்று தென் சீன மார்னிங் போஸ்டுக்கு இந்த ஆராய்ச்சியின் முதன்மை வடிவமைப்பாளரான பேராசிரியர் ஜி ஜெங்சின் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

`புவியீர்ப்பு விசை குறைந்த சூழ்நிலையில் இந்தத் தாவரங்கள் வளர்வது பற்றி அறிவதன் மூலம், விண்வெளி தளத்தை எதிர்காலத்தில் அமைப்பதற்கு அடித்தளம் உருவாக்குவதில் திட்டமிட முடியும்" என்று அவர் கூறியுள்ளார்.

பருத்தியை ஆடை தேவைக்கும், உருளைக் கிழங்குகளை விண்வெளி வீரர்களின் உணவு தேவைக்கும், கடுகு எண்ணெய் விதைகள் எண்ணெய் தேவைக்கும் பயன்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

பூமியில் இருந்து நிலவுக்குச் செல்வதற்கான 20 நாள் பயணத்தில் ``உயிரியல் தொழில்நுட்பம்" மூலம் இந்த விதைகள் செயலற்ற நிலையில் வைக்கப் பட்டிருந்தன என்று சீனாவின் ஷின்ஹுவா செய்தி ஏஜென்சி தெரிவித்துள்ளது. விதைகளுக்குத் தண்ணீர் விடுவதற்கு தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து உத்தரவு அனுப்பிய பிறகு தான் அவை முளைக்கத் தொடங்கியிருக்கின்றன. இந்த ஆராய்ச்சித் திட்டத்தில் இதுவரை 170 படங்கள் எடுத்து பூமிக்கு அனுப்பப் பட்டுள்ளதாக ஷின்ஹுவா தெரிவித்துள்ளது.

சீனா நிலவு ஆராய்ச்சித் திட்ட (CLEP) பிரிவு, இந்த ஆராய்ச்சியில் எடுக்கப்பட்ட பல படங்களை வெள்ளிக்கிழமை வெளியிட்டது. விண்கலம் தரையிறங்கியுள்ள இடத்தின் பனோரமா காட்சிகளும், விண்கலம் தரையிறங்கிய விடியோவும் அதில் உள்ளன.

நன்றி - பிபிசி

## சபரிமலையில் 2 பெண்கள் நுழைவதை தடுத்த பக்தர்கள்

சபரிமலை ஐயப்பன் கோயிலில் நுழைவதற்குச் சென்ற கண்ணுரை சேர்ந்த ரேஷ்மா நிஷாந்த் மற்றும் கொல்லத்தை சேர்ந்த ஷானிலா ஆகியோர் நீலிமலையில் வைத்து புதன்கிழமை அதிகாலையில் பக்தர்களால் தடுக்கப்பட்டதாக த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
அதிகாலை சுமார் 4 மணிக்கு பம்பா வந்த அவர்கள், காவல்துறையின் உதவியோடு சபரிமலைக்கு பயணத்தை தொடங்கினர்.

நீலமலை பகுதியில் வந்தபோது, சபரிமலையில் இருந்து திரும்பி வந்த 2 பக்தர்களால் அவர்கள் தடுக்கப்பட்டதாக த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

## உகந்தமலையில் திங்களன்று தைப்பூசத்திருவிழா!



(காரைதீவு நிருபர் சகா)
வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த தைப்பூசத்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை(21) நடைபெறவுள்ளது.

காலை 10 மணியளவில் பாற்குடபவனி மலைக்கோயில் வள்ளிநாயகி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும். தொடர்ந்து முருகனுக்கு பால்அபிசேகம் இடம்பெறும்.

அடியார்கள் செம்புடன் வருகைதந்தால் போதுமானது. பால் ஆலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று ஆலய செயலாளர் கு.ஸ்ரீபஞ்சாட்சரம் தெரிவித்தார். பாற்குடபவனிக்குரிய பாலை வழங்க உபயகாரர் தம்பிலுவில் ரமேஸ்குமார் குடும்பத்தினர் முன்வந்துள்ளனர். மாலை 4.30 மணியளவில் திருவிளக்குப்பூஜை இடம்பெறும். தொடர்ந்து வசந்தமண்டப பூஜை சுவாமி உள்வீதியுலாவருதல் என்பன இடம்பெறும். தைப்பூசக் கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்று(21) பகல் மட்.அரசினர் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் வே.இலட்சுமிசுந்தரத்தின் பகல் அன்னதானம் இடம்பெறும்.
அடியார்கள் நலன்கருதி விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் பஞ்சாட்சரம் மேலும் தெரிவித்தார்.
திருவிளக்குப்பூஜையில் கலந்து கொள்வோர் கொண்டுவரவேண்டிய பூஜைப்பொருட்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

# சிறப்பு மாநாடு

போருக்குப் பின்னரான இலங்கையில் சமூக - பொருளாதார மீளுருவாக்கம் குறித்து இந்த மாநாடு ஆராயும். வழங்கப்படும் உதவிகளை விநியோகிப்பதில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு, செயற்பாடு குறித்து இது விவாதிக்கும்.



இந்த வகையில், போருக்கு பின்னரான தேவைகள் தொடர்பில் எந்த அளவுக்கு புலம்பெயர் மக்களின் பங்களிப்பு இருக்கிறது என்பதையும், கருத்துருவாக்க சிந்தனைகளிலும் மற்றும் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புக்கான கொள்கையிலும் இதுவரையிலான அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து கற்றுக்கொண்டவற்றை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு பிரயோகிப்பது என்றும் இந்த மாநாடு ஆராயும்.

## இலங்கையில் போருக்குப் பின்னரான சமூக - பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு

இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி, செங்கலடி, மட்டக்களப்பு

காலம் : 19 (சனிக்கிழமை), ஜனவரி, 2019 காலை 9:00மணிக்கு

**ஏற்பாடு: புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத்தமிழர்கள் அமைப்பு (பிரித்தானியா)**

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.
PHARMACY
TIP TOP +HEALTH CARE+
SUPER MARKET
CITY CENTRE
BUDGET SHOP
CASH & CARRY
Young Forever
CAFETERIA
FCC Cafe
இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
TP: 0652222722,
Hotline: 0772072722




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa